தலைப்பு 123 – நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 123 – நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட தொகுப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்கு உரித்தான வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு இலக்கம் 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு, பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு, பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் பயன்பாட்டினை மாத்திரம்

நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மூலதனச் செலவினம்

நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய மூலதனச் செலவினங்களைக் கணக்கிடுகையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(i)	செலவின விடய இல. 123-2-7-29-2104/12 (நகர்ப்புற மறுமலர்ச்சிச் செயற்திட்டத்திற்கு உதவும் செயற்திட்டம்) இற்காக ஏற்கப்பட்ட ரூபா 2.71 மில்லியன் செலவினம் குறைத்துப் பதியப்பட்டிருந்தது.	முற்பணப் பெறுவனவுகளின் மூலம் ஏற்கப்பட்ட ரூபா 2.76 மில்லியன் செலவினம் திறைசேரிச் செலவினமாக 2024 ஆம் ஆண்டில் அறிக்கை யிடப்படாது 2023 ஆம் ஆண்டுடன் தொடர்பான ரூபா 4.53 மில்லியன் 2024 ஆம் ஆண்டில் செயற்திட்டக் கணக்குகளுக்கு சீராக்கப் பட்டிருந்தமை வேறுபாட்டிற்கான காரணமாகி இருந்தது.	வருடத்திற்கு உரிய சரியான செலவினம் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ii)	ஏதேனுமோர் நிதியாண்டில் அதிகாரப் பொறுப்பு இன்றி ஒதுக்கீட்டின் எல்லை மீறப்பட்டு செலவினம் ஏற்கப்பட்டிருப்பின், நிதிப் பிரமாணம் 69 (1) இன் பிரகாரம், அச் செலவினம் அதிகாரப் பொறுப்பற்ற செலவாகக் கருதப்படும். மேலும் அதைத்	இது தொடர்பாக நிதி அமைச்சிற்கு 2024 திசெம்பர் 10 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கோரல்களில் கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தல் களின் படி நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் தேவையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு அத்	மதிப்பீட்டு ஒதுக்கீட்டு எல்லை மீறப்பட்ட செலவினம் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தீர்ப்பதற்கு அடுத்துவரும் ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தால் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். இருப்பினும், இந்த அமைச்சின் கீழ் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட 04 செலவின விடயங்களுக்கான எல்லை மீறப்பட்டு 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 1,454.9 மில்லியன் செலவினத்தை ஈடுசெய்வதற்கு, மேற்குறித்தவாறு பாராளுமன்றத்தால் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படாது 2024 ஆம் ஆண்டில் செலவின விடய இல. 123-02-21-09-2104-(கொழும்பு பெருநகரப் பகுதி திடக்கழிவு முகாமைத்துவத் திட்டம்) இற்கு ஒதுக்கீட்டுத் தொகையில் ரூபா 1,454.9 மில்லியனை நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்படுவதற்கு அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	தொகையைச் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	

(ஆ) ஆதன இயந்திர உபகரணங்கள்

ஆதன இயந்திர உபகரணங்கள் கணக்கீடு செய்யப்படுகையில் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(i)	நிதி அல்லாச் சொத்துக்கள் கூற்றின் (BOS) படி, ஆண்டின் போது சொத்துக் கொள்வனவு மற்றும் கையகப்படுத்துதல் கூட்டுத்தொகை ரூபா 19,599.2 மில்லியனாக இருந்த போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றின் படி நிதிச் சொத்துக்களைப் பெறுவதற்கான செலவு ரூபா 20,107.34 மில்லியனாகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 508.14 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	திறைசேரியால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி அல்லாச் சொத்துக்கள் கூற்றின் படி, ஆண்டின் போது சொத்துக் கொள்வனவாக, சொத்துக்கள் அமைச்சால் கையகப்படுத்தப்பட்டு அமைச்சால் கொடுப்பனவு செய்யப்பட்டவை மாத்திரமே காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி செயலாற்றல் கூற்றில் நிதி அல்லாத சொத்துக்களாக அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளால் உருவான சொத்துக்களும் அமைச்சிற்காக வேறு அமைச்சுக்களால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் மூலமாக உருவான சொத்துக்களின் கூட்டுத்தொகையே காண்பிக்கப்பட்டுள்ளன.	நிதி அல்லாச் சொத்துக்களை துல்லியமாக அடையாளம் காண்பதற்கு ஏதுவான வகையில் கணக்குகள், தகவல்கள் மற்றும் ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டும்.

(ii)	அமைச்சின் நிதி ஒதுக்கீடுகளில் இலங்கை காணி மற்றும் காணி அபிவிருத்திடுக் கூட்டுத்தாபனத்தால் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒலியமுல்ல மற்றும் கொலன்னாவ எனும் நீர் சுத்திகரிப்பு நிலையத் செயற்திட்ட நிர்மாணத்திற்காக 2023 ஆம் 2024 ஆம் ஆண்டுகளில் ஏற்கப்பட்ட முறையே ரூபா 697.07 மில்லியன் மற்றும் ரூபா 1,187.28 மில்லியன் பெறுமதிகள் மாத்திரமே நிதி அல்லாத சொத்து அறிக்கையில் நடைமுறை வேலைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும், அச் செயற்திட்டங்களுக்காக அரசாங்கத்தால் ஏற்கப்பட்ட மொத்த செலவு, சொத்து அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிராமையால் அப் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கு அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இந்த செயற்திட்டங்களுக்கு 2022 ஆம் ஆண்டின் முன் எந்த நிதி ஒதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டிராமையால், 2022 ஆம் ஆண்டின் முன் எந்தச் செலவும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	நிதி அல்லாச் சொத்துக்களை துல்லியமாக அடையாளம் காணக் கூடிய வகையில் கணக்குகள், தகவல்கள் மற்றும் ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டும்.

(இ) முற்பணக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
ஹொரண சந்தை (கட்டம் 4) செயற்திட்டத்தின் நிர்மாணத்திற்காக 2024 பெப்ரவரி 05 ஆம் திகதி செலுத்தப்பட்ட ரூபா 1.75 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முன்பணம், 2024 ஆம் ஆண்டில் அமைச்சால் கழிக்கப்பட்டிருந்த போதிலும், அது கணக்கிடப்பட்டிராததன் காரணமாக வாடகை மற்றும் வேலை முன்பணக் கணக்கு மற்றும் வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதி, ரூபா 1.75 மில்லியன் அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.	அத் தொகை 2025 ஆம் ஆண்டில் சரி செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	முற்பணங்கள் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும்.

(ஈ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(i)	நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சிற்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மூலதனச் சொத்துக்கள் கையகப்படுத்தப்படுதல் (2104) இன் கீழ் நிதிப் பிரமாணம் 208 இன் மூலம் ஏற்கப்பட்ட ரூபா 15,628.18 மில்லியன் அமைச்சின் செலவினத் தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. குறித்த பெறுமதி அமைச்சின் மொத்த செலவினத்தில் 41 சதவீதமாக இருந்தது. எனினும், அச் செலவினங்களை உறுதிப்படுத்து வதற்காக அமைச்சால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை மூலம் அச் செலவினத்தை உறுதிப்படுத்த இயலாதிருந்ததுடன் இதன் மூலம் உருவான சொத்துக்களை இனங்காண முடியாதிருந்தது.	கந்துரட்ட தசாப்த அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் மீள்குடியேற்றச் செயற் திட்டத்திற்கான நிதிப் பிரமாணம் 208 இன் கீழ் செலவுகள் செய்யப்பட்டுள்ளன. இதனுடன் தொடர்புடைய செலவின அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. மீள்குடியேற்றத்திற்காக மாவட்ட செயலகங்களால் சமர்ப்பிக்கப்பட்ட செலவின அறிக்கைகளும் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. கணக்குகளில் நிதிப் பிரமாணம் 208 இன் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிற செயற்திட்டங்களுக்கு உரிய செலவினங்களிற்கு உரித்தான உறுதிப்படுத்தல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக தேவையான உரிய நேரத்தில் மற்றும் துல்லியமான தரவுகளும் தகவல்களும் உரிய காலப்பகுதிக்குள் தாமதமின்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ii)	நிதி அல்லாத சொத்துக்கள் அறிக்கையின் படி, 2024 ஜனவரி 01 இல் உள்ளவாறான ஆரம்ப சொத்து மீதிக்கு ரூபா 125,856.93 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் சேர்க்கப் பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 8,648.75 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் மாற்றப்பட்டிருந்தன. எனினும், அந்த சொத்துக்கள் அமைச்சின் கணக்குகளில் எடுத்துக் கொள்கையில் பெறுமதி மதிப்பிடப் பட்ட சொத்துக்கள், மதிப்பீட்டு அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிரா மையால் அச் சொத்துக்களின் துல்லியத் தன்மை கணக்காய்வின் போது பரீட்சிக்கப்பட முடியாதிருந்தது.	2024 ஆம் ஆண்டில் ஆரம்ப மீதியில் சேர்க்கப்பட்டு மாற்றப்பட்ட அந்தத் தொகைகளை உறுதிப்படுத்த தொடர்புடைய விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	கணக்காய்வு நோக்கங்களுக்காகத் தேவையான உரிய நேரத்திலான துல்லியமான தரவுகளும் தகவல்களும் குறித்த காலத்திற்குள் தாமதமின்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(iii)	03 சொத்து வகைகளின் கீழ் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 27,242.2 மில்லியன் சொத்துக்கள் முழுமையாகவும் 08 பிற சொத்து வகைகளைச் சேர்ந்த ரூபா 15,800.93 மில்லியன் சொத்துக்கள் நிதி அல்லாத சொத்து அறிக்கையில் இருந்து முழுமையாக நீக்கப்பட்டிருந்தன. இருப்பினும், அந்த சொத்து பெறுமதிகளின் துல்லியத் தன்மை கணக்காய்வில் உறுதிப் படுத்தப்பட முடியாதிருந்தது.	அச் சொத்துக்களுக்கு உரிய விபரமான அட்டவணைகள் பதிலுடன் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.	கணக்காய்வு நோக்கங்களுக்காகத் தேவையான உரிய நேரத்திலான துல்லியமான தரவுகளும் தகவல்களும் குறித்த காலத்திற்குள் தாமதமின்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(iv)	2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ஆதன, இயந்திர உபகரணங்களின் மீதி ரூபா 47,427.18 மில்லியனை உறுதிப்படுத்துவதற்காக அமைச்சு சமர்ப்பித்த CIGAS சொத்து பட்டியலை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு பிரிவாலும் பராமரிக்கப் படும் சொத்து பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.	நிதி அல்லாத சொத்து பட்டோலைகள் பதிலுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	ஒவ்வொரு பிரிவாலும் பராமரிக்கப்படும் சொத்து பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(v)	நிதிப் பிரமாணம் 214 இன் படி, நிதி கிடைப்பதையும், நிதி தொடர்ந்து பெறப்படுவதையும் உறுதி செய்வதற்காக பொறுப்பு பதிவேடு பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றின் இணைப்பு (iii) பிணைப்புகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய கூற்றின் மூலம் செலவின விடயம் 4 இன் கீழ் வெறிப்படுத்தப் பட்ட ரூபா 50 மில்லியன் பெறுமதியான பிணைப்புகள் மற்றும் பொறுப்புகளுக்காக பொறுப்புப் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்க வில்லை.	அமைச்சின் வீட்டுப் பிரிவு தொடர்பாக தயாரிக்கப்பட்ட பொறுப்புகள் பதிவேட்டின் ஓர் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.	கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக் தேவையான உரிய நேரத்திலான துல்லியமான தரவுகளும் தகவல்களும் குறித்த காலத்திற்குள் தாமதமின்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கடந்த வருடத்தின் அறிக்கையின் பந்திக்கான தொடர்பு	நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரை	இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு
2024 மே 31 ஆம் திகதிய கணக்காய்வு தொகுப்பு அறிக்கையின் 2.1 ஆம் பந்தி	தேவையான ஒதுக்கீடு சரியாக எதிர்வு கூறப்பட வேண்டும் என.	3.2

3. நிதி மீளாய்வு

3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
செலவின விடயங்களுக்காக நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ஒதுக்கீடு மாற்றப்படுகையயில் ஆண்டின் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் மாற்ற வேண்டிய போதிலும், 123-2-21-14-2509 மற்றும் 123-2-21-15-2509 ஆகிய இரண்டு செலவின விடயங்களுக்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 119 மில்லியன் ஒதுக்கீடுகள் 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மாற்றப்பட்டிருந்தன. எனவே, கட்டுநிதி பெறப்பட்டிராததன் காரணமாக மாற்றப்பட்ட மொத்த ஒதுக்கீட்டுத் தொகையும் எஞ்சியிருந்தது.	இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு செயற்திட்டங்களுக்கு செலுத்த வேண்டியிருந்த விலைப்பட்டியல்களை மீளளிப்பதற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டு புதிய செலவின விடயங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இதன்படி, தேவையான மேலதிக ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும், அக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்குப் போதுமான கட்டுநிதி 2024 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றிராமையால் அந்த ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	குறிப்பிட்ட காலத்திற்குள் தொடர்புடைய பிரமாணங்களுக்கு இணங்க ஒதுக்கீடுகள் மாற்றப்படுவதன் மூலம் செயற்பாடுகளை திறமையாகவும் ஆக்கபூர்வமாகவும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண இல. 50 இற்கு இணங்காத வகையில் அதி மற்றும் குறைவான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

	கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	தேவையை அடையாளம் காணப்படாமல், 02 மீண்டெழும் செலவினங் களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 4.8 மில்லியனும், 11 மூலதன செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 3,033 மில்லியனும் முழுமையாக எஞ்சியிருந்தது.	ஆண்டின் போது தேவைகள் ஏற்படாமையாலும், நிதி அமைச்சின் இணக்கப்பாடு கிடைக்கப்பெற்றிராமையாலும் சில செயற்திட்டங்களை செயற் படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் செயற்படுத்தப் படாமையாலும் குறித்த செயற் திட்டங்கள் செயற் பட்டிராமை போன்ற காரணங்களால் ஒதுக்கீடுகள் எஞ்சியுள்ளன.	மதிப்பீடுகளை இயன்றவரை துல்லியமாக தயாரிப்பதன் மூலம் ஒதுக்கீடுகளையும் கட்டுநிதிகளையும் திறமையாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	27 மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 706.34 மில்லியனில் ரூபா 296.34 தொகையும் 34 மூலதனச் செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 36,443.26 மில்லியனில் ரூபா 11,076.23 மில்லியனுமாக மொத்தம் ரூபா 11,372.57 எஞ்சி யிருந்தது. இந்தச் சேமிப்பின் சதவீதம் 10 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது.	எதிர்பார்க்கப்படும் செலவினங்கள் ஏற்பட்டிராமை மற்றும் அமைச்சின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் ஏற்பட்ட காரணங்களால் செயற்திட்ட முன்னேற்றத்தை அடைய முடியாததாலும் ஒதுக்கீடுகள் எஞ்சியுள்ளன.	மதிப்பீடுகளை இயன்றவரை துல்லியமாக தயாரிப்பதன் மூலம் ஒதுக்கீடுகளையும் கட்டுநிதிகளையும் திறமையாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(இ)	தேவைப்பாட்டை சரியாக இனங்காணாது, ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக 04 செலவின விடயங்களுக்கு மேற் கொள்ளப்பட்டிருந்த ஒதுக்கீட்டுத் தொகையான ரூபா 46.1 மொத்த ஒதுக்கீடும் மேலும் 06 செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப் பட்ட ஒதுக்கீட்டுத் தொகையில் 50 சதவீதத்திற்கும் மேலான தொகையும் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.	திறைசேரியால் மேற்கொள்ளப் பட்ட தீர்மானத்தில் செலவினை மேற்கொள்ள இயலாமை, இந்திய உதவி பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தால் குறித்த செலவினம் ஏற்பட்டிராமை, எதிர்பார்க்கப்பட்ட செலவினம் எழாமை, செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றம் எய்தப்பெறாமை, நிதி அமைச்சின் ஆலோசனையில் பேரில் சரியான செலவின விடயங்களுக்கு ஒதுக்கீடுகளை மாற்றம் செய்வது போன்ற காரணங்களால் எஞ்சய ஏற்பாடு தேவையான செலவின	மதிப்பீடுகளை முடிந்தவரை துல்லியமாகத் தயாரிப்பதன் மூலம் ஒதுக்கீடுகள் மற்றும் கட்டுநிதிகளை திறமை யாகவும் ஆக்கபூர்வமாக வும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

		விடயங்களுக்கு மாற்றப் பட்டுள்ளன.	
(ஈ)	2024 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படாது 11 செலவின விடயங்களுக்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 1,836.4 மில்லியன் ஒதுக்கீடுகள் மாற்றப் பட்டிருந்தன.	2023 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டு வந்த செயற்திட்டங்கள் 2024 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படுமா என்பது குறித்த நிச்சயமற்ற தன்மை காரணமாக அவற்றிற் கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிராத போதிலும் 2024 ஆம் ஆண்டில் குறித்த செயற்திட்டங்கள் மீண்டும் செயற்படுத்தப்பட்டதால் தேவையான மேலதிக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. மேலும், தவறான செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் சரியான செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.	மதிப்பீடுகள் முடிந்தவரை துல்லியமாகத் தயாரிப்பதன் மூலம் ஒதுக்கீடுகளும் கட்டுநிதிகளும் திறமை யாகவும் ஆக்கபூர்வமாக வும் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	04 செலவின விடயங்களுக்கு வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,008.5 மில்லியன் போது மானதாக இன்மையால், குறித்த 04 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேலான சதவீதம், அதாவது ரூபா 1,014.17 மில்லியன், நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் மாற்றப் பட்டிருந்தன.	ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளுக்குள் அத்தியாவசிய செலவினங்களை நிர்வகிக்க இயலாமை காரணமாக, இதன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள 4 செலவின விடயங்களுக்காக தேவையான மேலதிக ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	மதிப்பீடுகள் முடிந்தவரை துல்லியமாகத் தயாரிப்பதன் மூலம் ஒதுக்கீடுகளும் கட்டுநிதிகளும் திறமையாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படுதல்

பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	2024 ஜனவரி 10 ஆம் திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இல. 01/2024 இன் 12.1 ஆம் பந்தியின் படி, வருடாந்த ஒதுக்கீட்டு எல்லைக்கு மேலாக பொறுப்புகளும் கடப்பாடுகளும் ஏற்படுத்தலாகாததுடன் எதிர் காலத்தில் ஒதுக்கீட்டைப் பெறும் எதிர்பார்ப்புடன் எந்த	திறைசேரிச் சுற்றறிக்கையின் படி இனங்காணப்பட்ட சகல பொறுப்புகளும் 2024 ஜனவரி 31 இல் உள்ளவாறு பொறுப்பு களாகப் பதிவு செய்யப் பட்டுள்ளன. குறித்த பொறுப்பு கள் கணக்கீட்டுப் பதிவுகளில் காண்பிக்கப்பட்டுள்ளன.	ஒதுக்கீட்டு எல்லைகள் மீறப்பட்டு பொறுப்புகளும் கடப்பாடுகளும் ஏற்படுத்தப்படலாகாது.

	கடப்பாட்டையும் ஏற்படுத்த லாகாது. இருப்பினும், அமைச்சால் 03 செலவின விடயங்களுக்கு ரூபா 236.3 மில்லியன் தொகைக்கு மேலாக மொத்தம் ரூபா 20.62 மில்லியன் பொறுப்புகள் ஏற்படுத்தப் பட்டிருந்தன.		
(ஆ)	இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் 2024 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களின் படி, 2 செலவின விடயங்களின் கீழ் அமைச்சிலிருந்து ரூபா 1,212.21 மில்லியன் அமைச்சின் பொறுப்புகள் மற்றும் கடப்பாட்டு அறிக்கையில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.	இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத் தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்கு, 2024 டிசம்பர் 31 வரை எந்தவொரு பொறுப்புகளுக்கும் எந்த கடப்பாடுகளும் ஏற்படுத்தப் பட்டிருக்கவில்லை.	ஆண்டின் போது ஏற்படுத்தப்பட்ட சகல பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான விபரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(இ)	அமைச்சால் 09 செலவின விடயங்களின் கீழ் மீளாய்வாண்டிற்காக ஏற்படுத்தப் பட்டிருந்த மொத்தம் ரூபா 312.03 மில்லியன் பெறுமதியான பொறுப்புகள் தொடர்பான விபரம் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான அறிக்கையில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.	திறைசேரியால் இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பது தொடர்பாக வெளியிடப்பட்ட அரச கணக்குகள் வழிகாட்டுதல் இல. 05/2024 இன் அறிவுறுத்தல்களின் படி 2025 ஜனவரி 31 இல் உள்ளவாறான அனைத்து பொறுப்புகளும் அறிக்கையிடப்பட்டுள்ளன.	ஆண்டின் போது ஏற்படுத்தப்பட்ட சகல பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான விபரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஈ)	திறைசேரியிலிருந்து பெறப்பட்ட 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றின் படி, நகர அபிவிருத்தி, நிர்மாணிப்புகள் மற்றும் வீடமைப்பு அமைச்சின் செலவின விடயங்களுடன் தொடர்புடைய மொத்த பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் மீதி ரூபா 1,044.59 மில்லியனாக இருந்த போதிலும் அமைச்சின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்று மீதிகளின் மொத்தம் ரூபா 1,094.57 மில்லியனாக இருந்தது. ரூபா 49.98 மில்லியன் தொகையான வேறுபாட்டிற்கான காரணம் விளக்கப்பட்டிருக்க வில்லை.	திறைசேரியால் 2024 ஆம் ஆண்டிற்காக வெளியிடப்பட்ட பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்று நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் வேறு பொறுப்புகளினதும் கடப்பாடுகளினதும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும்.

3.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	அமைச்சின் நிதி கட்டுப்பாட்டிற் காக ஒரு வினைத்திறனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக பிரதான கணக்கீட்டு அதிகாரி சான்றளிக்க வேண்டும். அந்த முறைமையின் வினைத்திறன் குறித்து அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு, முறைமையை வினைத்திறனாக முன்னெடுத்துச் செல்ல தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும், மேலும் அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் செய்யப்பட்டு, அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அத்தகைய மீளாய்வுகள் மேற்கொள்ளப் பட்டமைக்கு அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.	அமைச்சின் வினைத்திற னுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமைக் காக அமைச்சின் நிதி நடவடிக்கைகளை வழிநடத்துவதற்கு நிதிப் பிரமாணம் 135, 136 மற்றும் 137 இன் கீழ் அதிகாரிகளுக்கு அதிகாரங் கள் வழங்கப்பட்டு, அந்த நடவடிக்கைகள் இடம் பெறுவது குறித்து தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்படுகிறது. அந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டமை தொடர்பான அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், வருடாந்தம் திட்டமிடப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு, தற்போதுள்ள உள்ளக கட்டுப்பாட்டு குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றிற்கான நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	2018 ஆம் ஆண்டு இலக்கம் 19 இன் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் விதிகளுக்கு அமைய தேவையான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்9.
(ஆ)	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவைப்படும் விதத்தில் குறிப்பிட்ட காலப்பகுதிகளுக்குள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக் களுக்கும் பதிலளிப்பதாக பிரதான கணக்கீட்டு அதிகாரியும் கணக்கீட்டு அதிகாரியும் சான்றளிக்க வேண்டிய போதிலும், அறிக்கையின் 4.9 ஆம் பந்திக்கமைய	அமைச்சினால் நடை முறைப்படுத்தப்படும் திட்டங்களும் பெரும் பாலான நடவடிக்கைகளும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. அந்த செயற்திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பான கணக்காய்வு ஐயவினாக்களுக்கு உரிய	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் விதிகளுக்கு அமைய செயற்பட வேண்டும்.

கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.	அடிப்படை தகவல்களை அந்த நிறுவனங்களிடமிருந்து பெற்று, ஆய்வு செய்து, பதில்களைத் தயாரிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் எடுக்கும் என்பதை அமைச்சும் ஏற்றுக் கொண்டுள்ளது. அந்த நிலைமையை குறைப்பதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	

3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	அமைச்சிற்கு சொந்தமான KL – 9507 இலக்க வாகனத்தை திருத்துவதற்காக, வாகனத்தின் முகவர் நிறுவனத்திடம் 2021 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. திருத்த வேலைகள் நிறைவடைந்து அந்த நிறுவனம் 2023 செப்தெம்பர் 27 ஆம் திகதி ஒரு பொருள் விலைப்பட்டியலுக்கு (Invoice) வழங்கியிருந்த போதும், குறித்த செலவு 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. 2024 மார்ச் 13 ஆம் திகதி அந்த நிறுவனம் மீண்டும் சமர்ப்பித்த பொருள் விலைப்பட்டியலுக்கான பணத்தை அமைச்சு செலுத்தியிருந்தது. 2021 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட பொறுப்பிற்கும் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்காக நிதி பிரமாணம் 115 இன்படி அனுமதியின்றி 2024 ஜுன் 24 ஆம் திகதி ரூபா 2.5 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.	இச் செயற்பாட்டை நிறைவு செய்வதற்கு 2021 ஆம் ஆண்டில் அனுமதி கிடைத்திருந்த போதிலும், செயல் நிறைவு செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டிற்குரிய ஒரு பொருள் விலைப்பட்டியல் மீண்டும் வழங்கப்பட்டமையால், அந்த பொருள் விலைப்பட்டியலுக்கு பணம் செலுத்துவதற்கு நிதி பிரமாணம் 115 இன் கீழ் அனுமதி பெறுவது அவசியமற்றதாகும்.	2021 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட பொறுப்பிற்கும் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்காக 2024 ஆம் ஆண்டில் பணம் செலுத்தும் போது நிதி பிரமாணம் 115 இன் படி அனுமதி பெற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	அனுராதபுரம் மஹவிளச்சிய வணக்கத்திற்குரிய மாதுலுவாவே சோபித தேரர் வீட்டுத்திட்டத்தின் கீழ், வீடுகள் மற்றும் ஏனைய கட்டிடங்களை அமைப்பதற்கான ஒப்பந்தத்திற்காக ரூபா 4.70 மில்லியன் மாறுபாடு தொடர்பில் பெறுகை வழிகாட்டித் தொகுப்பின் 8.13.4 இன் படி, நிரந்தர தொழில்நுட்பக் குழுவின் (STC) முன் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்குறிப்பிட்ட விசேட நோக்கெல்லை மாற்றத்திற்காகவும் முறையான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை	அந்த திட்டத்தில் ரூபா 4.70 மில்லியன் மாறுபாடு அடையாளம் காணப்படவில்லை. நோக்கெல்லை மாற்றத்தின் அடிப்படையில் IPC 11 பணம் செலுத்தும் நேரத்தில் ரூபா 3 மில்லியன் மாறுபாடாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த மாறுபாடு மொத்த செலவில் 10 சதவீதத்திற்கும் குறைவாகும். விலை மாறுபாடுகளை அங்கீகரிப்பதற்கு முன்னர் நிரந்தர தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் (STC) முழுமையான அனுமதி பெறுவதற்கான தேவை இல்லை.	கொள்முதல் பெறுகை வழிகாட்டித் தொகுப்பின 8.13.4 இன்படி, நிரந்தர தொழில்நுட்பக் குழுவின் (STC) முன் அனுமதி பெறப்பட வேண்டும், மேலும் மேற்குறிப்பிட்ட விசேட விடயப்பரப்பு மாற்றத்திற்காகவும் முறையான அனுமதி பெறப்பட வேண்டும்29.

(இ) கொழும்பு நகரில் உள்ள கால்வாய்கள், குளங்கள் மற்றும் தடாகங்களை பராமரித்தல், வெள்ளத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் ஈரநில முகாமைத்துவ செயற்திட்டங்களை நடை முறைப்படுத்துவதற்காக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினால் 2023 ஆம் ஆண்டில் திறைசேரியின் ஒதுக்கீடுகளின் கீழ் மேற் கொள்ளப்பட்ட பணிகளுக்கு, அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய கட்டணங்கள் மற்றும் அதன் மீது 17 சதவீத பொது வேலைச் செலவுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல் களுக்கு திறைசேரியினால் ரூபா 2,924.29 மில்லியன் வழங்கப் பட்டிருந்தது. இந்த வருமானத்தில் 75 சதவீதத்திற்கு அதாவது ரூபா 2,211 மில்லியனுக்குரிய 25 காரியங்களின் செலவு ரூபா 831 மில்லியன் ஆக இருந்தமையால், இந்த பணிகளுக்கான புதிய கட்டணங்களின் படி தயாரிக்கப்பட்ட பட்டியல்கள் காரணமாக செலவில் 166 சதவீதம் அதாவது ரூபா 1,380 மில்லியனுக்கும் அதிகமான இலாபம் ஈட்டப்பட்டிருந்தது. அதன்படி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய கட்டணங்கள் யதார்த்தமானவை அல்ல என்பது அவதானிக்கப்பட்டது.	2019 ஆகஸ்ட் 21 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் அமப/ 19/2133/116/078 இன் அமைச்சரவை அனுமதியின் படி அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை கட்டணங்களுக்கு (Basic Rate) மேலதிகமாக 17 சதவீத கட்டணம் (Overhead) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி திறைசேரி நிதிகளின் கீழ் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் 2023 ஆம் ஆண்டில் மேற்கொண்ட செயற் திட்டங்களுக்குரிய பணம் என்பதால், அந்த நிறுவனம் அதிக இலாபத்தை அடைந்திருக்கவில்லை.	கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கு பொருத்தமான கட்டணங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.6 மோசடியான தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட மோசடியான தன்மையிலான கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் கீழே காணப்படுகிறது.

கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2021 ஒக்டோபர் 21 முதல் 2023 டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்) பதவியில் முழு நேரமாகக் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட உதவிச்	தாபன விதிக்கோவையின் II ஆம் பகுதியின் 29 ஆம் பிரிவின் படி 2025 மே 20 ஆம் திகதியிடப்பட்டு மேலதிக செயலாளர் (நிறுவன விவகாரங்கள்) நியமிக்கப் பட்டு ஆரம்ப விசாரணை	ஆரம்ப விசாரணை அறிக்கையின் பரிந்துரைகள் மற்றும் முறையான பரிசோதனைகள் மூலம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை

செயலாளர், கடலோர பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சில் பதில் கடமையாற்றுவதற்காகவும் நியமிக்கப்பட்டிருந்தார். 2022 ஜனவரி முதல் 2023 செப்தெம்பர் வரையிலான காலப்பகுதியில் அவருக்கு ஒதுக்கப்பட்ட டபிள் கப் வாகனத்தின் எரிபொருள் செலவுகளாக ரூபா 0.9 மில்லியன் கோரப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த அதிகாரியால் உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்துவதற்காக விடுத்த வேண்டுகோள் அல்லது தனிப்பட்ட பணத்தில் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கும், அதனை மீள் நிரப்புவதற்காக அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட அங்கீகாரம் அல்லது குறித்த காலப்பகுதியில் டபிள் கப் வாகனத்திற்கு தனது தனிப்பட்ட பணத்தில் எரிபொருளுக்காக செலவிட்டதற்கான எந்தவொரு உறுதிப்படுத்தலும் இன்றி அமைச்சு 2023 ஒக்டோபர் 20 ஆம் திகதி ரூபா 0.9 மில்லியன் பணத்தைச் செலுத்தியிருந்தது.

மேலும், தற்போது நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக (போக்குவரத்து மற்றும் பராமரிப்பு) கடமையாற்றும் இந்த அதிகாரி 2023 ஜனவரி 23 ஆம் திகதி முதல் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபை யின் பதில் பொது முகாமை யாளராகவும் நியமிக்கப் பட்டிருந்ததுடன் இலக்கம் 13/2008 இன் பொது நிர்வாக சுற்றறிக்கையின் 05 ஆம் பந்திக்கு முரணாக 2023 ஜனவரி 27 ஆம் திகதி முதல் 2024 நவம்பர் 18 ஆம் திகதி வரை யிலான காலப்பகுதியில் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபையின் குழாம் வாகனங்களையும் பயன்படுத்தி யிருந்தார். அதற்காக அந்த அதிகாரசபையால் எரிபொருளுக் காக மாத்திரம் ரூபா 2.63 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

நடத்தி அறிக்கை வழங்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. குறித்த ஆரம்ப விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளின் படி அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 கடமைகளை நிறைவேற்றாமை

	கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
	2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடைந்த பின்னர் வட கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்காக வீடுகள்.:. காணிகளை வழங்கும் செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அங்கிருந்து 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் வட கிழக்கு மாகாணங்களில் உள்ள 08 மாவட்டங்களில் 36,736 வீடுகளை அமைப்பதற்காக அமைச்சு ரூபா 29,813 மில்லியன் பணத்தை செலவிட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
(அ)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட 207 வீடுகளிலும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கு முன்னர் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட மேற்கூரை மட்டம் வரையில் வேலைகள் நிறைவு செய்யப்பட்ட 102 வீடுகளிலும், சுவர் மட்டம் வரையில் வேலைகள் நிறைவு செய்யப்பட்ட 12 வீடுகளிலும், அத்திவாரம் மட்டும் போடப்பட்ட ஒரு வீட்டிலும் வேலைகள் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு இறுதி வரையில் நிறைவு செய்யப்படவில்லை	வீடுகளின் அலகுகளின் செலவு அதிகரித்துள்ள தால், பயனாளிகளுக்கு வழங்கப்படும் மானியத்தை அதிகரிப்பதற்காக இது வரையில் அமைச்சரவை பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வேலைகள் முழுமையாக நிறைவு செய்யப்படாத வீடுகளின் நிர்மாணப் பணிகளை இந்த ஆண்டுக்குள் நிறைவு செய்யுமாறும், பிரதேச செயலாளர்களுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களுக்கு அமைய செயற்படாத பயனாளிகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கு மாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்யாத வீடுகள் தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.

(ஆ)	மீளாய்வாண்டின் இறுதியில் யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள போதிலும், யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்கள் மேலும் அடையாளம் காணப்பட்டு வருவதுடன், மீள்குடியேற்ற நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்படவில்லை.	இதுவரையில் அனைத்து நலன்புரி நிலையங்களும் மூடப்பட்டு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. எனினும், இடம்பெயர்ந்த குடும்பங்கள் இதுவரையிலும் தற்காலிக வீடுகளிலேயே தங்கியிருப்பதால், அவர்களது வீட்டுத் தேவையை பூர்த்தி செய்ய வேண்டும். இதுவரையில் வட கிழக்கு மாகாணங்களில் காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன. 2024 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 234.83 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.	இடம்பெயர்ந்தவர்களை அடையாளம் காணும் முறைமையை மீளாய்வு செய்து, அந்த நடவடிக்கைகளை நிறைவு செய்து மீள்குடியேற்ற நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை அடையாமை

கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
இலங்கையின் வட கிழக்கு மாகாணங்களில் மோதல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக கொங்கிறீட் பலகைகளான வீடுகளை அமைக்கும் செயற்திட்டம் 2020 பெப்ரவரி 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆகஸ்ட் 12 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையில் 04 தடவைகள் கால நீடிப்புகள் வழங்கப்பட்ட போதிலும், இச் செயற்திட்டம் முறையான வகையில் நிறைவேற்றப்படாத காரணத்தினால் அமைச்சால் 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி ஒப்பந்த உடன்படிக்கையை முடிவுக்கு கொண்டுவந்து ரூபா 19.2 மில்லியன் பெறுமதியான செயற்றிறன் உத்தரவாதத்தை பணமாக்கி பொது வைப்பு கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		

(அ)	ஒப்பந்த உடன்படிக்கையின் 15.2 (இ) பிரிவின் படி செயற்றிறன் குறைபாடு காரணமாக பணமாக்கப்பட்ட இந்த பணத்திலிருந்து, குறைபாடுகளை நிவர்த்தி செய்த பின்னர் எஞ்சிய பணம் ஒருங்கிணைந்த நிதிக்கு செலவு வைக்கப்பட வேண்டியதுடன் 15.4 ஆம் பிரிவின்படி, குறைபாடுகளை பூர்த்தி செய்தல், வேலைகள் நிறைவு செய்வதில் ஏற்பட்ட தாமதத்தால் ஏற்பட்ட நட்டம் மற்றும் ஏற்கப்பட்ட ஏனைய செலவுகளை ஈடுசெய்வதற்கு தேவையான பணம் வைத்திருக்கப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணாக 2024 மே 31 ஆம் திகதி அந்த பணத்திலிருந்து ரூபா 9.18 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு மீண்டும் செலுத்தப்பட்டிருந்தது.	ஒப்பந்த உடன்படிக்கையின் 15.4 ஆம் பிரிவின்படி, ஒப்பந்த உடன்படிக்கை முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் செயற்திட்டத்தின் ஆலோசக நிறுவனமான தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO) 2024 மே 29 ஆம் திகதி வழங்கிய சான்றிதழ் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஒப்பந்த முகாமைத்துவத்திற்கான வழிகாட்டித் தொகுப்பின் இலக்கம் 12 இன்படி, செயற்திறன் உத்தரவாதத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை குறைத்து எஞ்சிய பணத்தை ஒப்பந்த நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைய செயற்பட வேண்டும், மேலும் உடன்படிக்கையின் நிபந்தனைகளிலிருந்து விலகியமை தொடர்பாக தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	ஒப்பந்த உடன்படிக்கையை முடிவுக்கு கொண்டுவந்து 02 வருடங்கள் கடந்துள்ள போதிலும், நிதிப் பிரமாணம் 705(ஆ) இன்படி ஒப்பந்த நிறுவனத்தை கறுப்புப் பட்டியலில் சேர்க்க அமைச்சு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.	2006 பெறுகை வழிகாட்டித் தொகுப்பின் படி, அந்த நிறுவனத்தை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பது தொடர்பாக ஆய்வு செய்வதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அந்த குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் படி தற்போது அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	நிதிப் பிரமாணத்தின் படி தேவையான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.

4.3 எதிர்பார்க்கப்பட்ட பயனை (Outcome) அடையாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	மினுவாங்கொட வர்த்தக வளாக நிர்மாணிப்புச் செயற்திட்டம் ரூபா 180.64 மில்லியன் ஒப்பந்த பெறுமதிக்கு 03 ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டு 03 கட்டங்களில் 2018 - 2024 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.		

	இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
(i)	03 மாடிகளைக் கொண்ட இந்த பொது வர்த்தக வளாக கட்டிடத்தை 03 கட்டங்களின் கீழ் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தமை கணக்காய்வில் சர்ச்சைக்குரியதாக இருந்தது.	முதல் கட்டத்தில் முழு கட்டிடத்தின் அடித்தள அமைப்பு மற்றும் முதல் மாடியின் இடுக்கு மட்டம் வரையான பகுதியும், இரண்டாவது கட்டத்தில் எஞ்சிய இரண்டு மாடிகளின் நிர்மாணப் பணிகளும், மூன்றாவது கட்டத்தில் மின் தூக்கி மற்றும் ஏனைய அனைத்து சிறிய நிர்மாணப் பணிகளும் நிறைவு செய்யப்பட்டு முழு செயற்திட்டமும் நகர சபையிடம் ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	அடிப்படை செயற்திட்டங்கள் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	ரூபா 88.96 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியைக் கொண்ட இதன் முதல் கட்டம் 2019 டிசம்பர் 28 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் 556 நாட்கள் கால தாமதத்தின் பின்னர் வேலைகள் நிறைவு செய்யப்பட்டதால், தாமத அபராதமாக ரூபா 8.89 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. இருப்பினும், ஒப்பந்தக்காரர் இதற்கு எதிராக பிணக்கு தீரவு சபை (DAB) க்கு செய்த முறைப்பாட்டிற்கு கிடைத்த தீர்ப்பின் படி, இரு தரப்பினரின் இணக்கப்பாட்டின் பேரில் ரூபா 12.86 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டியிருந்தது. செயற்திட்டத்தின் ஆலோசகர் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட கால நீடிப்புகளுக்கு அமைச்சு அனுமதி வழங்காததை நியாயப்படுத்த காரணங்களை பிணக்கு தீர்வு சபையிடம் சமர்ப்பிக்காத காரணத்தினால் மேற்குறிப்பிட்ட பணத்தை ஒப்பந்தக்காரருக்கு செலுத்த அமைச்சுக்கு நேர்ந்திருந்தது. எனினும், அதற்கு பொறுப்பான அதிகாரிகள் தொடர்பாக அமைச்சால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பான அனைத்து நியாயப்படுத்தல்களையும் அமைச்சு வழங்கியிருந்த போதிலும், ஒப்பந்த உடன்படிக்கைகளின் படி பிணக்கு தீர்வு சபை குறித்த தீர்ப்பை வழங்கியுள்ளது	ஒப்பந்தங்கள் தொடர்பான வழக்குகள் மற்றும் தீர்க்கும் நடவடிக்கைகள் தொடர்பாக வினைத்திறனுடனும் பயனுள்ள விதத்திலும் செயற்பட வேண்டும், அத்துடன் அதற்கு இணங்காமையால் அமைச்சிற்கு ஏற்படும் நட்டங்கள் மற்றும் இழப்புகளுக்குரிய அதிகாரிகள் மீது தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(iii)	ரூபா 17.96 மில்லியன் பெறுமதிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட திட்டத்தின் இரண்டாவது கட்டம் 2021 டிசம்பர் 19 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்தது. கடைகளில் சுருளும் கதவுகள் இடுதல், நீர்ப் வசதி பெற்றுக்கொள்ளல், மின்சார வசதி பெற்றுக்கொள்ளல், வடிகால் அமைப்பு மற்றும் கட்டிடம் தொடர்பான காணியை அபிவிருத்தி செய்தல் போன்றவற்றை முழுமையாக நிறைவு செய்யாமல் 2022 ஏப்ரல் 01 ஆம் திகதி மினுவாங்கொட நகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.	அப்பொழுது நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக குறித்த அனுமதிகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் சுருளும் கதவுகள் உட்பட ஏனைய அடிப்படை தேவைகள் சில மினுவாங்கொட நகர சபை நிதியிலிருந்து நிறைவு செய்யப்பட்டன.	ஒப்பந்தத்திற்கு அமைய செயற்பட வேண்டும்
(iv)	செயற்திட்டத்தின் 3 ஆம் கட்டத்தின் கீழ் கட்டிடத்திற்காக மின் தூக்கி ஒன்றை பொருத்துதல் மற்றும் விசேட தேவைக்குரியவர்களுக்கான மலசலகூடம் அமைப்பதற்காக ரூபா 17.96 மில்லியன் பெறுமதிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தம் 2024 ஜூலை 6 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் 86 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், தாமத காலத்திற்காக கால நீடிப்பு நிறுவனத் தலைவரால் அங்கீகரிக்கப்படாத காரணத்தினால் ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் இலக்கம் 49.1 இன்படி தாமத அபராதமாக ரூபா 0.9 மில்லியனை ஒப்பந்தக்காரரிடமிருந்து கழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 9.61 மில்லியன் (VAT அற்ற) செலவில் 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வேலைகள் நிறைவு செய்யப்பட்ட மின் தூக்கி 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை செயற்படாமல் இருந்தது.	மினுவாங்கொட வர்த்தக வளாகம் - 3 ஆம் கட்டத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்காக 2024 ஜூலை 06 ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்த நிறுவனத்திற்கு செயற்திட்டம் அந்த திகதியில் நிறைவு செய்ய முடியாததன் காரணமாக விடுத்த வேண்டுகோள்கள் மற்றும் ஆலோசகர் நிறுவனத்தின் பரிந்துரைகளின் பேரில் ஒப்பந்தத்தின் நிறைவு செய்யும் காலம் 2024 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையில் பணிப்பாளர் நாயகம் (நகர அபிவிருத்தி) இனால் நீடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த நிறுவனத்தில் அதன் வேலைகள் 2024 செப்தெம்பர் 25 ஆம் திகதிக்குள் நிறைவு செய்து ஒப்படைத்துள்ளதால், ஒப்பந்தத்தின் படி தாமத அபராத பணத்தை அறவிடுவதற்கான வாய்ப்பு இல்லை.	கால நீடிப்பிற்கான அமைச்சின் செயலாளரின் அனுமதி கிடைக்காமையால், குறித்த அபராத பணத்தை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(v)	பிரதேச மக்களின் தேவைகள் பூர்த்தியாகும் விதத்தில் திட்டங்களை தயாரிக்காது, மினுவாங்கொட வர்த்தக வளாகத்தை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்மையால், ஏறத்தாழ ரூபா 180 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த வர்த்தக வளாகத்திற்கு செலவிட்ட பணத்திற்குரிய அதிகபட்ச பயனை பெற முடியாதிருந்தமை பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.	நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மினுவாங்கொட நகர சபை அதிகாரப் பிரதேசத்திற்காக தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் மூலம் அடையாளம் காணப்பட்ட இந்த செயற்திட்டத்தின் மூலம் 90 வர்த்தக அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. நகரில் இருந்த பெறுமதியான காணியில் அதிகபட்ச பயனை பெறக்கூடிய விதத்திலும், தற்போதுள்ள கேள்வியை பூர்த்தி செய்யக்கூடிய விதத்திலும் கட்டிடத் திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் நகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், இதுவரையிலும் வர்த்தக வளாகம் முழுமையாக செயற்பாட்டு நிலையில் உள்ளது.	பொதுமக்களின் வரிப் பணத்தில் நிர்மாணிக்கப்பட்ட இந்த கட்டிடத்திலிருந்து அதிகபட்ச பயனை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சீதாவக்கபுர நகர சபைக்காக ரூபா 113.11 மில்லியன் செலவில் பொது வர்த்தக கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு 2024 ஏப்ரல் 10 ஆம் திகதி அந்த நகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன:		
(i)	2022 ஆம் ஆண்டில் குறித்த நோக்கெல்லை கட்டுப்படுத்தப்பட்டமையால், கடைகளின் அளவு சிறியதாக இருந்தமையாலும், கடைகள் திட்டமிட்டபடி வர்த்தக நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளக்கூடிய விதத்தில் அமைக்கப்படாத காரணத்தால் இந்த கட்டிடம் பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டு 07 மாதங்கள் கடந்திருந்த போதிலும், கடை உரிமையாளர்கள் கடைகளை குத்தகைக்கு எடுப்பதை நிராகரித்திருந்தனர். அதன்படி இந்த வர்த்தக வளாகத்தை அமைப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை இதுவரையில் நிறைவேற்ற முடியவில்லை என்று அவதானிக்கப்பட்டது	சீதாவக்க நகர சபையின் வேண்டுகோளுக்கு அமையவே வர்த்தக அறைகள் அமைக்கப்பட்டுள்ளன, மேலும் அந்த வர்த்தக அறைகள் சிறியதாக்கப்படவில்லை	02 வருடங்களுக்கும் மேலாக இந்த கடைகளை பயனுள்ள விதத்தில் பயன்படுத்தாமை தொடர்பாக பரீட்சிக்கப்பட்டிராமை குறித்து குறித்த கடைகளை பயனுள்ள விதத்தில் பயன்படுத்த தேவையான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்

(ii)	ரூபா 102 மில்லியன் பெறுமதியான திருத்தப்பட்ட ஒப்பந்த பெறுமதியை விட மேலதிகமாக 04 தடவைகள் மாறுதல் கட்டளைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 23.62 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது. இது மேற்குறிப்பிட்ட மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட ரூபா 34.74 மில்லியன் அதாவது 34 சதவீத முரணாகும். பெறுகை வழிகாட்டித் தொகுப்பின் 8.13.4 ஆம் பந்திக்கமைய முரண்களின் சராசரி அளவு அவசர நிச்சயமற்ற ஒதுக்கீடுகளை மிகைக்குமாயின் பிரதான கணக்கீட்டு அதிகாரியிடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டும். எனினும், அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. மேலும், நோக்கெல்லை கட்டுப்படுத்தப்பட்டமை காரணமாக திருத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை.	செயற்திட்டத்தின் அத்தியாவசிய பகுதிகளை நிறைவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட மொத்த மதிப்பீடு ரூபா 102 மில்லியன் என நிதி, பொருளாதாரம், ஸ்திரப் படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது, மேலும், அதில் திருத்தப்பட்ட முரண்கள் விலைத் தளம்பல் (Price Escalation) மற்றும் வரிகள் (Tax) உள்ளடக்கப் படவில்லை. எனினும், செயற்திட்டத்திற்கான மொத்த முரண்கள் உட்பட தயாரிக்கப்பட்ட மொத்த மதிப்பீடு ரூபா 167.6 மில்லியன் ஆகும். மேலும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான முன் மொழியப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தில் மதிப்பீட்டுப் பணமாக ரூபா 167.6 மில்லியன் குறிப்பிடப் பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் இறுதி விலைப் பட்டியலின் படி முரண்களின் சராசரி அளவு அவசர நிகழத்தக்க ஒதுக்கீடுகள் (Contingencies) 10 சதவீதத்தை தாண்டாத மையால், பெறுகை வழிகாட்டித் தொகுப்பின் 8.13.4 இற்காக திணைக்களத் தலைவரின் குறித்த அனுமதி பெறப்பட்டுள்ளது.	பெறுகை வழிகாட்டல் நடைமுறையின் 8.13.4 இன் படி, திடீர் நிச்சயமற்ற ஒதுக்கீட்டை விஞ்சுகையில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
(இ)	அமைச்சினால் ரூபா 400 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட மஹர நிர்வாக மற்றும் வர்த்தக வளாக கட்டிடம் உரிய தரப்பினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்காமையால், 2019 ஆம் ஆண்டு முதல் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் 06 வருடங்கள் செயற்படாமல் இருந்தது. அமைச்சால் இந்த கட்டிடத்தை பயன்படுத்துவதற்காக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த கட்டிடத்தை மஹர பிரதேச சபை பொறுப்பேற்பதற்காக 2025 பெப்ரவரி 21 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறே, அந்த கடிதம் மூலம் மஹர பிரதேச சபையால் செய்யப்பட்ட ஆலோசனைகளை ஆய்வு மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டு உடன்படிக்கையை திருத்துவதற்கான	நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தைப் பயன் பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாமைக்கான காரணமான விடயங்களை இனங் கண்டு தேவையான திருத்தத்தை மேற்கொள்வதற்கும் கட்டிடத்தினால் உயரிய பயனைப் பெற்றுக்கொள்வதற்கும் தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

		நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டப் பிரிவு மேற்கொண்டு வருகிறது	
(ஈ)	கொட்டகலை ஈரநில பூங்கா அபிவிருத்தி செயற்திட்டம் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினால் ரூபா 75.66 மில்லியன் வேலை நிறைவு பெறுமதியில் அமைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
(i)	”ஈரநிலமாக அபிவிருத்தி செய்வதற்காக கையகப்படுத்தப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் உரிமை ஒப்படைத்திருந்த 12 ஹெக்டேயர் காணியில், ஈரநில பூங்கா அமைப்பதற்காக சுமார் 05 ஹெக்டேயர் பகுதி பயன்படுத்தப்பட்டிருந்தது. தேவையை முறையான விதத்தில் அடையாளம் காணாமல் காணி கையகப்படுத்தப்பட்டதால் எஞ்சிய 07 ஹெக்டேயர் சுமார் 04 வருடங்களாக எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் செயற்படாமல் இருந்தது.	தற்போது எஞ்சிய ஹெக்டேயர் அளவை பிரதேச செயலாளரிடம் மீண்டும் உரிமை ஒப்படைப்பதற்காக ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.	தேவையை சரியாக அடையாளம் கண்டு காணியை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும், மேலும் எஞ்சிய ஹெக்டேயர் அளவின் உரிமை ஒப்படைக்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும்.
(ii)	மேற்குறிப்பிட்ட கையகப்படுத்தப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகள் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை, மேலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத எஞ்சிய காணிப் பகுதியை காணி கையகப்படுத்தும் சட்டத்தின் 39 (அ)1 துணை விதிமுறைப் படி பழைய காணி உரிமையாளர்களுக்கு மீள ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	ஈரநில பூங்காவை அபிவிருத்தி செய்ய குறித்த காணி அளவை காணி கையகப்படுத்தும் சட்டத்தின் விதிகளின் படி கையகப்படுத்தும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு, எஞ்சிய காணி அளவை மீள ஒப்படைத்த பின்னர் 05 ஹெக்டேயர் அளவிற்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.	கையகப்படுத்தப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகள் மற்றும் எஞ்சிய காணிகளை மீள ஒப்படைக்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும்.

(iii)	15,572.19 சதுர மீற்றர் பரப்பளவைக் கொண்ட தடாகத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 7.01 மில்லியனும் நடைபாதை அமைப்பதற்காக ரூபா 25.86 மில்லியனும் செலவிடப்பட்டிருந்த போதிலும், அவற்றில் எந்தவொரு பராமரிப்புப் பணியும் மேற்கொள்ளப்படாமல் கைவிடப்பட்டிருந்தமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைய முடியாதிருந்ததுடன் ஏற்கப்பட்ட மொத்த செலவான ரூபா 32.87 மில்லியன் பயனற்ற செலவாகி இருந்தது.	முறையான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்படும் வரையில் நீர்த்தேக்க பகுதியை தவிர்த்து எஞ்சிய அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளின் பராமரிப்புப் பணிகள் ஒரு வருட காலத்திற்கு கொட்டகலை பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனவே, பூங்காவை முறையாக முகாமைத்துவம் செய்வது கொட்டகலை பிரதேச சபையின் பொறுப்பாகும். அந்த காலப்பகுதி நிறைவடைந்துள்ளமையால் மீண்டும் அந்த காலப்பகுதியை நீடிக்கப்பட்டு, பூங்காவை முறையாக பராமரிப்பதற்காக கொட்டகலை பிரதேச சபை இணக்கம் தெரிவித்துள்ளது.	செயற்திட்டத்தை முறையாக நிறைவு செய்தல் மற்றும் பராமரித்தல் மூலம் இந்த செயற்திட்டத்தின் பயனை அதிகரிக்க தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iv)	ரூபா 6.38 மில்லியன் செலவில் 24 w LED 40 வீதி விளக்கு கம்பங்களும், மீற்றர் அறை (Meter room) ஒன்றும் அமைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வளாகத்திற்கு மின்சார வசதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை 129, மேலும் பாதுகாப்பு தொடர்பான எந்தவொரு வேலைத்திட்டமும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, மின் விளக்குகள் மற்றும் சுவிட்சுகள் அனைத்தும் ஒரு சிலரால் களற்றப்பட்டிருந்தமை பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.	பூங்காவை முறையாக முகாமைத்துவம் செய்வது கொட்டகலை பிரதேச சபையின் பொறுப்பாகும்.	செயற்திட்டத்தை முறையாக திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் நிறைவு செய்வதற்காக பொறுப்பான தரப்பினர்களை அடையாளம் கண்டு, குறித்த பொறுப்புகளை நிறைவேற்றாதமை தொடர்பாக தாமதமின்றி பரிசோதித்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும், மேலும் செயற்திட்டப் பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நிரந்தர வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்தல் வேண்டும்.
(உ)	ரூபா 65.77 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட பெலிஅத்த அம்பிட்டிய குளம் நடைபாதை மற்றும் காணி அழகுபடுத்தல் அபிவிருத்தி திட்டம், பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் எந்தவொரு பயனுமின்றி செயற்படாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது.	இந்தச் செயற்திட்டத்தின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டு, பல சந்தர்ப்பங்களில் பெலிஅத்த பிரதேச சபையிடம் பொறுப்பேற்குமாறு அறிவிக்கப்பட்ட போதிலும், பல்வேறு குறைபாடுகளை சுட்டிக்காட்டி செயற்திட்டத்தை பொறுப்பேற்க மறுத்திருந்தது.	செயற்திட்ட முகாமைத்துவ நடவடிக்கைகள் வினைத்திறனுடனும் பயனுள்ள விதத்திலும் மேற்கொள்ளப்படுவதன் மூலம் பிரச்சினைகளை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஊ)	வணக்கத்திற்குரிய மாதுளுவாவே சோபித தேரர் கிராமத்தின் வீட்டுத் திட்டத்திற்கு அமைய கிராமிய நீர் வசதிகளை வழங்குவதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபைக்கு 2021 டிசம்பர் 27 ஆம் திகதி ரூபா 56.2 மில்லியன் பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் அதற்கு 08 மாதங்களின் பின்னரே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனவே, செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 03 வருடங்கள் கடந்துள்ள போதிலும், செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பயன்களை அடைய முடியவில்லை. இவ்வாறே, சரியான அளவுகள் பெறப்படாமல் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட காரணத்தினால், மதிப்பீட்டிற்கு செய்யப்பட்ட திருத்தமாக 2021 டிசம்பர் 31 ஆம் திகதி ரூபா 5.51 மில்லியன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபைக்கு மீண்டும் செலுத்த வேண்டியிருந்தது. எதிர்பார்க்கப் பட்ட காரியத்தை நிறைவேற்று வதற்கு முன் 03 வருடங்களுக்கு மேலாக வேறு ஒரு நிறுவனத்திற்கு பணம் வழங்கப்பட்டிருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	2025 மே 25 ஆம் திகதிக்குள் இந்த செயற்திட்டத்தின் அனைத்து நிர்மாணப் பணிகளும் நிறைவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக செயற் திட்டத்தின் ஆலோசகர் நிறுவனமான அரச பொறியியல் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளதுடன், தற்போது வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மதிப்பீடுகளில் விலை மாற்றம், செயற்திட்டத்தின் திட்டமிடல் மாற்றம் நோக்கெல்லை மாற்றம் (Scope change) மற்றும் நாட்டில் நிலவிய உள்நாட்டு சூழ்நிலைகள் காரணமாக மதிப்பீட்டுத் திருத்தம் ஒன்று மேற்கொள்ள வேண்டியிருந்தது. செயற்திட்டத்தை நிறைவு செய்து ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்துவதற்காக 03 வருடங்களுக்கும் மேலாக நீர் வழங்கல் சபையின் கணக்கில் அந்தப் பணத்தை வைத்திருக்க வேண்டியிருந	செயற்திட்ட நடவடிக்கைகளை குறித்த காலப்பகுதிக்குள் பயனுள்ள விதத்திலும் நிறைவு செய்து அதன் பயன்களைப் பெற தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும், அத்துடன் சரியான அளவுகளைப் பெற்று மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கும், ஒதுக்கப்பட்ட நிதியானது எதிர்பார்க்கப்பட்ட வேலைகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் உரிய நிறுவனத்திற்கு செலுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	தொழில்நுட்ப நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மதிப்பீட்டுச் செலவு ரூபா 917 மில்லியன் ஆன பிட்டிபன தளகல (கட்டம் 1) வீதி மற்றும் மேற்கு இடைமாற்று வீதி அபிவிருத்தி செயற் திட்டங்களுக்காக 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அமைச்சால் ரூபா 1,369.21 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. காணி கையகப்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இந்த வீதிகளின் வேலைகளை நிறைவு செய்ய முடியாமல் செயற்திட்டங்கள் முடிக்கப் பட்டிருந்தன. அதன் காரணமாக வீதி அமைப்பதன் மூலம் பெற எதிர்பார்க்கப்பட்ட பயன்களை மக்களுக்கு வழங்க அமைச்சிற்கு முடியாமல் போனதுடன், இந்த	இதில் ஒரு பகுதியின் இழப்பீடு பரிசோதனை இடம்பெற்று வருவதுடன், நிர்மாணப் பணிகளுக்காக 2026 ஆம் ஆண்டிற்கு வரவுசெலவுத் திட்ட ஒதுக்கத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத் திற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. எஞ்சிய பகுதியை காணி கையகப் படுத்துதல் நிறைவு செய்யப்பட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிப்பதற்காக 2027 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கு இடைமாற்று வீதியின் எஞ்சிய 50 மீற்றர் அளவை இணைப்பதற்குத் தடையாக இருந்த 02 காணித்	வீதி அமைப்பதன் மூலம் பெற எதிர்பார்க்கப்பட்ட பயன்களை மக்களுக்கு வழங்குவதற்காக தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

செயற்திட்டங்களுக்காக ஏற்கப்பட்ட செலவும் பயனற்ற செலவாக இருந்தது.	துண்டுகளுக்கு 02 நிலத் துண்டுகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டு அதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.	

4.4 திட்டங்களை நிறைவு செய்யாமல் கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ) இலகு ரயில் போக்குவரத்து (LRT) செயற்திட்டம் இலகு ரயில் போக்குவரத்து (LRT) திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களின் பின்னர், ஜனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்ட 2020 செப்டம்பர் 21 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், இச் செயற்திட்டக் கிரயம் பயனுள்ள செயற் திட்டம் அல்ல என அடையாளம் காணப்பட்டதால், இச் செயற்திட்டம் ஒருதலைப்பட்சமாக நிறைவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இச் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக ஏற்கப்பட்ட மொத்தச் செலவு ரூபா 5,978 மில்லியன் ஆகும். இவ்வாறே, இச் செயற்திட்டத்தை ஒரு தலைப்பட்சமாக நிறைவு செய்ததன் காரணமாக, இச் செயற்திட்டத்தின் பிரதான ஆலோசகர் நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்வதற்காக, அந்த நிறுவனத்தால் ஒப்பந்தத்தின் 2.9.5 ஆம் பிரிவின் படி ரூபா 5,169 மில்லியன் உரிமைப் பணத்தை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிடம் கோரியிருந்தது. இது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழு அறிக்கையின் பரிந்துரையின் படி, அந்த ஆலோசகர் நிறுவனத்திற்கு 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் மேலும் அமெரிக்க டாலர் 1.25 மில்லியன், ஜப்பானிய யென் 229.53 மில்லியன் மற்றும் இலங்கை ரூபா 131.58 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தமையால்,	இது கொள்கை ரீதியான தீர்மானத்தின் மூலம் ஏற்பட்டதால், இந்தச் செலவை ஏற்க நேரிட்டது	செயற்திட்டத்தின் திட்டமிடல் கட்டம் முதல் இடைநிறுத்தம் வரையிலான அனைத்துக் கட்டங்களையும் மீளாய்வு செய்வதன் மூலம், செயற்திட்டத்தின் தோல்விக்குரிய காரணிகளை தாமதமின்றி அடையாளம் காண வேண்டும், அத்துடன் இதன் மூலம் எதிர்கால செயற் திட்டங்களின் வினைத்திறனையும், பயனுறுதியையும் அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	இந்தச் செலவுகள் அனைத்தும் பயனற்ற செலவுகளாக மாறியிருந்தன.ஷ		
(ii)	ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவரமைப்பின் (JICA) பொதுக் கடன் நிபந்தனைகளின் கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்டிருந்த இந்தக் கடன் உடன்படிக்கை, இலங்கை அரசாங்கத்தின் ஒருதலைப்பட்சமான தீர்மானத்தின் படி நிறைவு செய்யப்பட்ட போதிலும், இதுவரையில் கடன் உடன்படிக்கை சட்டரீதியாக இரத்து செய்யப்படாத காரணத்தினால், அந்தக் கடன் தொகையை அரசாங்கத்தின் வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கோ அல்லது தேவையான நடவடிக்கைகளை எடுத்து எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய நிதிக் குறைப்பை குறைத்துக்கொள்வதற்கோ 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த உடன்படிக்கை நிதி அமைச்சிற்கும் சம்பந்தப்பட்ட ஜப்பானிய நிறுவனத்திற்கும் இடையில் ஏற்பட்டதால், கடன் உடன்படிக்கையை இரத்துச் செய்யும் பொறுப்பும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஊடாக நிதி அமைச்சால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு செயலாகும்.	கடன் நிபந்தனைகளின் படி அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய நிதிக் குறைப்பை குறைத்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.
(iii)	செயற்திட்டத்திற்காக சுமார் 21 ஹெக்டேயர் காணி கையகப்படுத்தப்பட்டிருந்தது, மேலும் அந்தக் காணி தொடர்பாக கணக்காய்வு செய்யப்பட்ட திகதி வரையில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாது பயன்படுத்தப்படாமல் இருந்தது.	2022 மே 02 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி, இந்த கையகப்படுத்தப்பட்ட காணிகளை எதிர்கால போக்குவரத்துத் துறையின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதால், காணி உரிமையாளர்களுக்கு மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்க முடியாது.	கையகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படாமல் இருக்கும் காணிகளை பயனுள்ள பணிகளில் பயன்படுத்துவதற்கோ அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iv)	சுற்றுச்சூழல், தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் நிதி ரீதியாக பயனுள்ள செயற்திட்டம் என அடையாளம் காணப்பட்ட இந்தத் செயற்திட்டத்தை முறையான மற்றும் தர்க்கரீதியான பகுப்பாய்வு இன்றி ஒருதலைப்பட்சமாக நிறைவு செய்யப்பட்டிருந்தமையால், இலங்கைக்கு ஏற்பட்ட பொருளாதார மற்றும் நிதி ரீதியற்ற பாதகமான நிலைமைகள்	அமைச்சரவைத் தீர்மான இலக்கம் அ.ம.ப/23/1244/ 601/041 மற்றும் 2023 ஜுலை 17 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி, இது குறித்து ஜனாதிபதி செயலாளரே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதால், இச் செயற்திட்டம் தொடர்பாக அடுத்தகட்ட நடவடிக்கைகளை	செயற்திட்டத்தின் தோல்வி மற்றும் ஏற்பட்ட நட்டத்திற்குப் பொறுப்பானவர்களை தீர்மானிப்பதற்காக முறையான விசாரணையை மேற்கொண்டு, அந்த நட்டத்தை அறவிடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க

	தொடர்பாக பொறுப்பானவர்கள் குறித்து முறையான விசாரணையை மேற்கொண்டு, அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை குறைத்துக்கொள்வதற்குரிய எந்தவொரு நடவடிக்கையும் கணக்காய்வு செய்யப்பட்ட திகதி வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மேற்கொள்ள இந்த அமைச்சுக்கு அதிகாரம் இல்லை.	வேண்டும்.
(ஆ)	ஹம்பாந்தோட்டை மாவட்டம், கிழக்கு மாகாணம், மேல் மாகாணம் மற்றும் கொழும்பு நகரம் ஆகியவற்றுக்கான பிரதான திட்டங்களைத் தயாரிப்பதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு 2023 டிசம்பர் 14 ஆம் திகதி அமெரிக்க டாலர் 0.41 மில்லியனுக்கு சமமான ரூபா 137.1 மில்லியன் பணத்தை அமைச்சு செலவிட்டிருந்தது. மேல் மாகாணம் மற்றும் திருகோணமலை மாவட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டிலும் அதே நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை 05 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தாமல், மீண்டும் பிரதான திட்டங்களைத் தயாரிக்க அதே நிறுவனத்தைத் தெரிவு செய்தமை கணக்காய்வில் சர்ச்சைக்குரிய விடயமாக அமைந்தது.	அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பேரில் சிங்கப்பூரின் சபாணா ஜுரோங் நிறுவனத்துடன் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தங்களின்படி, அந்த மூன்று திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த மூன்று திட்டங்களின் முன்னேற்றத்தின் அடிப்படையில் இடைக்கால கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஹம்பாந்தோட்டை பிரதான திட்டம் நடைமுறைப்படுத்தும் செயற்திட்டத்தை தவிர்த்து எஞ்சிய இரண்டு திட்டங்களும் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளன. ஹம்பாந்தோட்டை மாநகரத் திட்டத்தை தயாரிக்கும் பணிகளின் ஒப்பந்தத்தின் படி சுமார் 50 சதவீதமளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இந்த மூன்று திட்டங்களும் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானங்களின் பேரில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களாகும்.	திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் ஆகியவை முறையான சாத்தியக்கூறு ஆய்வு ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும், அத்துடன் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளின் பயனுறுதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	பகுதியளவில் முடிக்கப்பட்டிருந்த பொரலஸ்கமுவ பலநோக்குக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள், தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03.⁚.2022 இன் iii ஆம் பந்திக்கமைய, பரஸ்பர இணக்கப்பாட்டின் பேரில் 2023 ஜனவரி 08 ஆம் திகதி முடிவுக்கு கொண்டுவரப் பட்டிருந்தது. பட்டியல்கள்	இந்தத் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய செயற்பாட்டு மையம் (NOR) இணக்கம் தெரிவித்துள்ளது. எனினும், இது ரூபா 180 மில்லியன் பெறுமதியான புதிய ஒப்பந்தமாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டியிருந்த மையால், ஒப்பந்தத்தை	இச் செயற்திட்டத்தை மீண்டும் செயற்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட பயன்களைப் பெற தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	தீர்க்கப்படும் போது மேற்கொள்ளப் படும் திருத்தங்கள் அல்லது தக்கவைப்புப் பணம் மற்றும் செயற்றிறன் பிணைப்பத்திரத்தை விடுவிப்பது குறித்து ஒரு குறிப்பிட்ட இணக்கப்பாட்டிற்கு வராமலேயே, 2023 மார்ச் 17 ஆம் திகதி தக்கவைப்புப் பணத்திலிருந்து ரூபா 5.86 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. செயற்றிறன் உத்தரவாதமும் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் காலாவதியாகியிருந்த போதிலும், அதன் காலத்தை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், பிற்காலத்தில் இச் செயற்திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவது தொடர்பாக அமைச்சு 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காதமையால், கட்டிடம் நிர்மாணிப்பதற்காக இதுவரையில் ஏற்கப்பட்ட ரூபா 248.79 மில்லியன் பணம் பயனற்ற செலவாக இருந்தது.	வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனவே, இதை மேலும் நடைமுறைப்படுத்துவதற்காக மேல் மாகாண சபையின் நிதியை ஒதுக்கி எஞ்சிய பகுதிகளை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.	
(ஈ)	ரூபா 294.33 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியின் பேரில் 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2023 டிசம்பர் 15 ஆம் திகதி வேலைகளை நிறைவு செய்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த அம்பாறை வாரச் சந்தை அபிவிருத்திச் செயற்திட்டம், 52 சதவீத பௌதீக செயற்றிறனையும் ரூபா 64.27 மில்லியன் நிதிச் செயற்றிறனையும் அடைந்த பின்னர் வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தமையால், அதற்காக ஏற்கப்பட்ட செலவு பயனற்ற செலவாக இருந்தது.	இச் செயற்திட்டம் 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்து வதற்காக NOR குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிராமையால், நடைமுறைப்படுத்தப்படவில்லை. 2024 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் பேரில் எஞ்சிய வேலைகளை நிறைவு செய்வதற்காக தற்போது அமைச்சரவை அங்கீகாரத் தைப் பெறுவதற்காக அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	இச் செயற்திட்டத்தை மீண்டும் செயற்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட பயன்களைப் பெற தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	ரூபா 83.60 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியின் பேரில் 2021 ஒக்டோபர் 06 ஆம் திகதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வேலைகளை நிறைவு செய்ய	இச் செயற்திட்டத்தின் எஞ்சிய வேலைகளை நிறைவு செய்வதற்கான நிதி ஒதுக்கீடு கிடைக்காமையால் மீண்டும் ஆரம்பிக்க முடியவில்லை, மேலும்	இச் செயற்திட்டத மீண்டும் செயற்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட பயன்களைப் பெற தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	வேண்டிய மாலிம்பொட தோட்ட வீடமைப்புத் திட்டம், 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் 35 சதவீத பௌதீக முன்னேற்றத்தை அடைந்திருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டிற்கு எந்தவொரு செயற்றிறனும் அடையப்படவில்லை.	சப்ரகமுவ மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டின் பேரில் எஞ்சிய வேலைகளை நிறைவு செய்வது தொடர்பாக ஆராயப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஊ)	நகர அபிவிருத்தி அதிகார சபையால் 2021 பெப்ரவரி 08 ஆம் திகதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட, ரூபா 39,057 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியைக் கொண்ட 1768 வீடுகளைக் கொண்ட 06 வீடமைப்புத் செயற்திட்டங்கள் 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு 23 சதவீதத்திற்கும் குறைவான செயற்றிறனை அடைந்த நிலையில் இடையில் நிறுத்தப்பட்டிருந்தன.	பொருளாதார நெருக்கடியுடன் இச் செயற்திட்டங்களின் நிர்மாணச் செலவு அதிகரித்தமையால், ஒப்பந்தக்காரர்களுடன் கூட்டு இணக்கப்பாட்டின் பேரில் தற்காலிகமாக நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. 03 செயற்திட்டங்களுக்காக அரச மற்றும் தனியார் பங்காளித்துவத்தின் கீழ் அல்லது ஒப்பந்தக்காரருடன் சந்தைப்படுத்தல் ஆலோசனைகளை சமர்ப்பித்து அது தொடர்பான இணக்கப்பாட்டிற்காக பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், 02 வீடமைப்புத் செயற் திட்டங்களுக்காக அரச மற்றும் தனியார் பங்காளித்துவத்தின் (PPP) அடிப்படையில் போட்டியான செயற்திட்டக் கோரிக்கைகளை (RFP) கோர நடவடிக்கை எடுக்கப்படும்.	இச் செயற்திட்டத்தை மீண்டும் செயற்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட பயன்களைப் பெற தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.5 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படும் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
யாழ்ப்பாணம் மாநகர சபை கட்டிடத்தை மீண்டும் அமைப்பதற் காக ரூபா 2,142.48 மில்லியன் ஒப்பந்த பெறுமதிக்கு தனியார் நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. இச் செயற்திட்டம் 2019 ஒக்டோபர் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2021 ஒக்டோபர் 09 ஆம் திகதி நிறைவு செய்ய	பெரிய அளவிலான செயற்திட்டங்களை மீளமைப்பதற்கும் துரிதப்படுத்து வதற்குமான குழுவின் (RAMP) தீர்மானத்தின் பேரில், பகுதியளவில் பூர்த்திசெய்யப்பட்ட இச் செயற்திட்டத்தை	இச் செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை துரிதமாக நிறைவு செய்து எதிர்பார்க்கப்பட்ட பயன்களைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட

திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய முடியவில்லை. ஆகையால், அமைச்சரவைத் தீர்மானம் இல. 22/1286/604/022 மற்றும் 2022 செப்தெம்பர் 05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம், இச் செயற்திட்டத்தின் எஞ்சிய வேலைகளை நிறைவு செய்யும் பொறுப்புடன் முழு கட்டிடத்தையும் யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சால் அதன்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறாயினும், 2024 ஒக்டோபர் 09 ஆம் திகதி வரை 1,125 நாட்களுக்கு 04 கால நீடிப்புகளை வழங்குவதற்கும், செயற்திட்டத்தின் ஒப்பந்த பெறுமதியை ரூபா 1,627 மில்லியனால் அதிகரித்து ரூபா 3,769 மில்லியனாக உயர்த்துவதற்கும் அமைச்சு நடவடிக்கை எடுத்து, செயற்திட்டத்தின் எஞ்சிய வேலைகளை மீண்டும் கட்டம் 1 மற்றும் 2 என 02 பிரிவுகளின் கீழ் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஏறத்தாழ 06 வருடங்கள் கடந்துள்ள போதிலும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் இந்தத் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 85 சதவீதமாகவும், நிதி முன்னேற்றம் ரூபா 1,819.64 மில்லியனாகவும் இருந்தது. இருப்பினும், முழு செயற்திட்டத்தையும் நிறைவு செய்வதற்குத் தேவையான எஞ்சிய வேலைகளை அடையாளம் கண்டு திருத்தப்பட்ட மதிப்பீட்டை தயாரிப்பதற்கும், அதற்கான உரிய அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் செயற்திட்டத்தின் ஆலோசகர் நிறுவனமான நகர அபிவிருத்தி அதிகார சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த அதிகார சபையிடம் போதுமான பணியாளர்கள் இல்லாமை இச் செயற்திட்டத்தின் பலவீனமான செயற்றிறனுக்கு பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்த

யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பேற்க மறுத்ததால், தேசிய செயற்பாட்டு மையம் (NOR), செயற்திட்டத்தை நிறைவு செய்வதற்கான பொருத்தமான தீர்வை வட மாகாண கௌரவ ஆளுநருடன் கலந்துரையாடி பரிசீலிக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளது.

அதன்படி, செயற் திட்டத்தின் எஞ்சிய நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்காக தேவையான செலவை மதிப்பிட்ட போது, அது ஏறத்தாழ ரூபா 2082 மில்லியன் செலவாகும் என கண்டறியப்பட்டது.

ஆகையால், செயற் திட்டத்தை நடைமுறைப் படுத்து வதற்காக 3 கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டதுடன், அதற்கான தேசிய செயற்பாட்டு மையம் மற்றும் செயற்திட்ட முதலீடு, முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு தொடர்பான குழுவின் (PIMEC) இணக்கப் பாட்டைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

செலவுகளின் பயனுறுதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போதிலும், அமைச்சு அதைக் கவனத்தில் கொள்ளாமல் அந்த நிறுவனத்திற்கு ஆலோசக கட்டணமாக ரூபா 98.66 மில்லியன் பணத்தையும் செலுத்தியிருந்தது.

4.6 வெளிநாட்டு உதவித் செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	கொழும்பு நகர புத்துயிர்ப்புத் செயற்திட்டத்திற்கு ஆதரவளிக்கும் செயற்திட்டம் (SCURP)		
(i)	நிதிப் பயன்பாட்டில் இருந்த வினைத்திறன் அற்ற தன்மை காரணமாக, அமெரிக்க டொலர் 200 மில்லியன் கடன் தொகையிலிருந்து அமெரிக்க டொலர் 70 மில்லியனைக் குறைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. இதன்படி, 3 ஆவது கட்டச் செயற்திட்ட நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், வீடமைப்புப் பயனாளிகளின் எண்ணிக்கையும் 1,272 ஆல் குறைக்கப்பட்டிருந்தது. மேலும், அமெரிக்க டொலர் 42 மில்லியன் பெறுமதியான இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பும் அமெரிக்க டொலர் 14 மில்லியனால் குறைக்கப்பட்டு அமெரிக்க டொலர் 28 மில்லியனாக இருந்தது. திருத்தப்பட்ட ஒப்பந்தத்தின் படி, காணி மறுசீரமைப்புக்கான தனியார் பங்காளித்துவ பங்களிப்பு அகற்றப்பட்டிருந்தது.	அவசர மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக கடன் தொகை மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பைக் குறைப்பதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்தது. பின்னர், மீண்டும் அமெரிக்க டொலர் 28 மில்லியனை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. அமெரிக்க டொலர் 28 மில்லியனை பயன்படுத்துவதற்கான விரிவான திட்ட ஆலோசனைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் AIIB வங்கியின் இணக்கமும் பெறப்பட்டுள்ளது.	நிதியை வினைத்திறனுடன் பயன்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும், அத்துடன் நிதிப் பயன்பாட்டிற்காக முறையான செயற்திட்டங்களை தயாரிக்க வேண்டும்.
(ii)	செயற்திட்டத்தின் பலவீனமான செயற்பாடு காரணமாக, திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் 05 வருடங்கள் கடந்துள்ள போதிலும், செயற்திட்டத்தின் திருத்தப்பட்ட கடன் தொகையான அமெரிக்க டொலர் 130 மில்லியனில் அமெரிக்க டொலர் 77.28 மில்லியன் அதாவது 59 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 562 மில்லியன் உறுதிப்பாட்டுக்	அனைத்து உப செயற்திட்டங்களும் 2020 ஆம் 2021 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டன. எனவே, கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் குறைவடைந்துள்ளது. செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றத்தின் அடிப்படையில் கடன் வழங்கும் நிறுவனத்தால் கடன் கொடுப்பனவுகளை	தொற்றுநோய் நிலைமைகளின் போது வழங்கப்பட்ட சலுகைகளையும் பயன்படுத்தி, குறித்த காலப்பகுதியில் நிதியைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	கட்டணமும், ரூபா 3,653.17 மில்லியன் வட்டியும் செலுத்த வேண்டியிருந்தது.	விடுவிப்பதால், கடன் மீதான வட்டியையும் செலுத்த வேண்டியிருக்கும்.	
(iii)	இந்தத் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் கொலம்பகே மாவத்தை 624 வீடமைப்பு அலகுகள் அமைக்கும் செயற்திட்டம், 2024 டிசம்பர் 17 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 5,145.03 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், கொழும்பு மாநகர சபையின் பிரதான கழிவுநீர் அமைப்புக்கு கழிவுநீர் இணைப்பைப் பெற முடியாத காரணத்தினால், இந்தத் செயற்திட்டத்தின் வேலைகளை நிறைவு செய்து எதிர்பார்க்கப்பட்ட பயன்களைப் பெற முடியவில்லை.	செயற்திட்டத்தில் 97 சதவீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 3 சதவீத வேலைகள் கொழும்பு மாநகர சபையின் பிரதான கழிவுநீர் அமைப்புக்கு கழிவுநீர் இணைப்பை அமைப்பதனால் தாமதமடைந்துள்ளதுடன் அதுவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட செலவிற்குள் நிர்வகிக்கக் கூடியதாக இருக்கும்.	நிர்ணயிக்கப்பட்ட காலவரையறைக்குள் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iv)	இச் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் ஸ்ரேடியம் கம 1000 வீடுகள் நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தது. அன்றைய தினம் வரை ரூபா 9,039.12 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த வீடமைப்புச் செயற்திட்டத்திற்கு கழிவுநீர் இணைப்பைப் பெற முடியாத காரணத்தினால் செயற்திட்டத்தின் வேலைகளை நிறைவு செய்து அதிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பயன்களைப் பெற முடியவில்லை.	செயற்திட்டத்தின் கழிவுநீர் இணைப்புப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக செயற்திட்டத்தின் எஞ்சிய வேலைகள் தாமதமாகின.	செயற்திட்ட காலவரையறைக்குள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(v)	இந்தத் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் அப்பிள்வத்தை 700 வீடுகள் நிர்மாணிக்கும் செயற்திட்டம், 2023 ஒக்டோபர் 17 ஆம் திகதி நிறைவு செய்யப்பட திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் பெறப்பட்டிருந்த பௌதீக முன்னேற்றம் 40.47 சதவீதம் மட்டுமே ஆகும். மிகக் குறைந்த முன்னேற்றத்தை அடைந்திருந்த இச் செயற்திட்டத்தின் ஒப்பந்த உடன்படிக்கையை புதுப்பித்து, 2025 ஒக்டோபர் 25 ஆம் திகதி வரை காலத்தை நீடித்து, மேலும் ரூபா 389 மில்லியன்	செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை துரிதப்படுத்துவதற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஒப்பந்தக்காரருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், இந்த நிலையை தவிர்ப்பதற்காக செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு, ஆலோசகர் நிறுவனமும் அமைச்சும் ஏற்கனவே சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளன. ஒப்பந்தக்காரரால் மேலதிக	திட்ட நிதியை வினைத்திறனுடனும் பயனுள்ள விதத்திலும் பயன்படுத்துவதன் மூலம் செயற்திட்ட காலவரையறைக்குள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	முன்பணம் வழங்குவதன் மூலம் ஒப்பந்தக்காரரின் நிதித் திறன் பலப்படுத்தப்பட்டிருந்தது.	முன்பணத்திற்காக செய்யப்பட்ட சில கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, தேவையான வங்கிக் கடனுறுதியைப் பெற்றதன் பின்னர் ஒப்பந்த பெறுமதியின் 10 சதவீதமான மேலதிக முற்பணம் எஸ்கிரோ கணக்கு மூலம் விடுவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.	
(vi)	இந்தத் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்ட ரூபா 4,510.91 மில்லியன் ஒப்பந்த பெறுமதியைக் கொண்ட பெர்குசன் மாவத்தை வீடமைப்புத் திட்டம், 2024 ஜனவரி 04 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அதன் நிர்மாணப் பணிகளின் பௌதீக முன்னேற்றம் 13.21 சதவீதமாக மிகக் குறைவாக இருந்தது. எனினும், அமைச்சு 2024 டிசம்பர் 31 ஆம் திகதி இச் செயற்திட்டத்தின் ஒப்பந்தத்தை திருத்தி ரூபா 392.25 மில்லியன் முன்பணத்தை வழங்கி ஒப்பந்தக்காரரின் நிதித் திறனை பலப்படுத்தியிருந்தது.	ஒப்பந்தக்காரரின் கோரிக்கையின் படி, வங்கிக் கடனுறுதியைப் பெற்றதன் பின்னர், ஒப்பந்த பெறுமதியின் 10 சதவீதமான மேலதிக முற்பணம் எஸ்கிரோ கணக்கு மூலம் விடுவிக்க தீர்மானிக்கப்பட்டது. குறித்த இலக்குகளை அடைவதற்காக நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துமாறு ஒப்பந்தக்காரருக்கு அறிவுறுத்தப்பட்டது. ஒப்பந்த உடன்படிக்கையின் படி திருத்தல் அறிவிப்பும் ஒப்பந்தக்காரருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. செயற்திட்டத்தின் மந்தமான முன்னேற்றம் தொடர்பாக ஒரு முடிவை எடுப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.	செயற்திட்ட நிதியை வினைத்திறனுடனும் பயனுள்ள விதத்திலும் பயன்படுத்துவதன் மூலம் செயற்திட்ட காலவரையறைக்குள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(vii)	கொழும்பு நகர மறுமலர்ச்சித் செயற்திட்டத்திற்கு ஆதரவளிக்கும் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்ட மாதம்பிட்டிய 700 வீடுகள் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் ஒப்பந்த பெறுமதி ரூபா 4,529.26 மில்லியன் ஆனதுடன் நிர்மாணப் பணிகள் 2024 டிசம்பர் 16 ஆம் திகதிக்குள் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் அதன் பௌதீக முன்னேற்றம் 44.20 சதவீதம் மாத்திரமேயாகும்.	கோவிட்-19 தொற்றுக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை இச் செயற்திட்டத்தின் முன்னேற்றத்திலும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவால் அறிவுறுத்தப்பட்டபடி செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை துரிதப்படுத்த ஒப்பந்தக்காரர் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், 2025 ஏப்ரல் இறுதிக்குள் செயற்திட்டத்தின் முன்னேற்றம் 52.23 சதவீதமாகி உள்ளது.	செயற்திட்ட நிதியை வினைத்திறனுடனும் பயனுள்ள விதத்திலும் பயன்படுத்துவதன் மூலம் செயற்திட்ட காலவரையறைக்குள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(viii)	ஒபேசேகரபுர 300 வீடமைப்பு அலகுகள் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள், 14 மாடிக் கட்டிடத்தின் அடித்தளம் மற்றும் அத்திவாரம் மட்டுமே அமைக்கப்பட்ட நிலையில் 2022 ஆம் ஆண்டில் வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. ஒரு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஊடாக புதிய ஒப்பந்தக்காரரை உடனடியாக அடையாளம் காண்பதற்கு 2022 செப்தெம்பர் 05 ஆம் திகதிய 22/1177/618/007 ஆம் இலக்க அமைச்சரவை அனுமதி கிடைத்திருந்த போதிலும், கணக்காய்வு செய்யப்பட்ட திகதி வரை ஒபேசேகரபுர வீடமைப்புத் செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன், அமைக்கப்பட்ட பகுதிகள் மேலும் சிதைவடைந்து கொண்டிருந்தன.	மீண்டும் கேள்வி கோருவதற்கான பெறுகை செயல்முறை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பு நகர மறுமலர்ச்சிச் செயற்திட்டத்திற்கு ஆதரவளிக்கும் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட அமெரிக்க டாலர் 28 மில்லியனிலிருந்து தேவையான நிதியைப் பயன்படுத்த கடன் வழங்கும் நிறுவனத்தால் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.	பெறுகை செயல்முறையை நிறைவு செய்து நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும், திட்ட நிதியை வினைத்திறனுடனும் பயனுள்ள விதத்திலும் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ix)	ஒப்பந்தக்காரரின் குறைந்த செயற்றிறன் காரணமாக இடையில் நிறுத்தப்பட்ட இச் செயற்திட்டம், ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளை முறையாக பின்பற்றாமல் இரத்து செய்தமையால், ரூபா 294.53 மில்லியன் பணம் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டியிருந்தது. எனினும், இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்ட அந்த நட்டம் தொடர்பாக நிதி பிரமாணம் 103, 104 மற்றும் 105 இன்படி முறையான விசாரணையை மேற்கொண்டு, இதற்குப் பொறுப்பான அதிகாரிகளை அடையாளம் கண்டு, குறித்த பணத்தை அறவிட மீளாய்வாண்டு முடியும் வரையில் அமைச்சால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஒப்பந்தத்தின் உப பிரிவு இலக்கம் 21.5 இன்படி, உரிமைக் கோரிக்கை மீளாய்வுக் குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	ஒப்பந்த உடன்படிக்கைக்கு இணங்காதமைக்கு பொறுப்பான அதிகாரிகளை அடையாளம் கண்டு, குறித்த பணத்தை அறவிட தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	நகரச் செயற்திட்டங்களைத் தயாரிக்கும் செயற்திட்டம் (UPPF)		
	அமெரிக்க டாலர் 200 மில்லியன் கடனை வழங்குவதற்குத் தேவையான அடிப்படைத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான ஆலோசனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி அமெரிக்க டொலர் 5.27 மில்லியனுக்கு சமமான	இந்த குறிப்பிட்ட தொழில்நுட்ப உதவி 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக மூடப்பட்டது. அந்தத் திகதி வரையில், ஏறத்தாழ ஆறு மாதங்களுக்குள், ஆலோசகர்களால் கேள்வி	செயற்திட்ட நிதியை வினைத்திறனுடனும் பயனுள்ள விதத்திலும் பயன்படுத்துவதன் மூலம் திட்ட காலவரையறைக்குள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை

	ரூபா 1,064.79 மில்லியன் கடனை வழங்கியிருந்தது. மேலும் அந்தப் பணத்தில் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 523.42 மில்லியனுக்கு சமமான அமெரிக்க டொலர் 1.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக தொழில்நுட்ப உதவிக் கொடையாக அமெரிக்க டாலர் 1 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், திட்டமிட்டபடி வேலைகளை நிறைவு செய்ய முடியாததாலும், மானியத்தின் கீழ் தொழில்நுட்ப உதவி முடிவடைந்ததமையாலும் வேலைகள் இடையில் நிறுத்தப்பட்டிருந்தன. இதன் விளைவாக, இந்தத் செயற்திட்டத்திற்காக ஏற்கப்பட்ட ரூபா 523.42 மில்லியன் பணம் பயனற்ற செலவாக இருந்தது.	கோருவதற்காக தயாரிக்கப்பட்ட ஏறத்தாழ அமெரிக்க டொலர் 9 மில்லியன் பெறுமதியான செயற்திட்டப் பொதிகள் தயாரிப்பு நிறைவு செய்யப்பட்டிருந்தது. திருகோணமலையில் செயற்திட்டங்கள் மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவ முன்முயற்சிக்கான கருத்துக் கட்டமைப்புகள் மற்றும் பாதுகாப்புக் கணிப்பீடுகள் நிறைவு செய்யப்பட்டன. ஆலோசனைத் திட்டத்தை நிறைவு செய்கையில் UPPF இன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சில செயல்பாடுகள் நிறைவு செய்யப்பட்டு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டன. வழங்கக்கூடிய அதிகபட்ச தகவல் மற்றும் தரவுகள் மற்றும் செயல்பாடுகள் தொடர்பான ஆவணங்கள் அமைச்சினதும் நகர அபிவிருத்தி அதிகார சபையினதும் மேலதிக தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளதால், செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவாக இருக்க மாட்டாது.	நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்திச் செயற்திட்டம் (AIUDP)		
(i)	செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, கடன் வழங்கும் நிறுவனத்தினால் ரூபா 8,149.96 மில்லியன் மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் ரூபா 1,629.99 மில்லியன் பணம் வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. செயற் திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 டிசம்பர் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், திட்டத்தின் பலவீனமான செயற்றிறன் காரணமாக செயற்திட்டக் காலப்பகுதியை 2025 மார்ச் 31 வரை நீடிக்க அமைச்சரவை அனுமதி கிடைத்திருந்தது. எனினும், அக் காலப்பகுதிக்குள்ளும் நிறைவு	திட்டமிடல் ஆலோசனை 21 மாதங்களில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்ட போதிலும், சில சிக்கல்கள் மற்றும் ஆலோசனை நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்ட நடைமுறைக் சிக்கல்கள் காரணமாக எதிர்பாராத விதமாக 34 மாதங்கள் வரை தாமதமானது. 2019 இல் கோவிட்-19 நோய்த்தொற்று மற்றும் 2020 இல் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்ட சிரமங்களால், கடன் வசதிகளை மீளமைப்பதற்கு	திட்ட நிதியை வினைத்திறனுடனும் பயனுள்ள விதத்திலும் பயன்படுத்துவதன் மூலம் செயற்திட்ட காலவரையறைக்குள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	செய்ய எதிர்பார்க்கப்பட்ட வேலைகளை முழுமையாக நிறைவு செய்ய முடியாத காரணத்தினால், அநுராதபுரம் புனித நகர அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைவு களைப் பெற முடியவில்லை என்று அவதானிக்கப்பட்டது.	அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்திருந்தது. அதன்படி, இலங்கை அரசாங்கமும் பிரான்ஸ் முகவரமைப்பும் கலந்துரையாடி செயற்திட்டத்தின் ஆரம்ப நோக்கெல்லையை திருத்தியுள்ளன. அதன்படி, தெற்கு பல்துறை போக்குவரத்து மையத்தை அமைத்தல் உள்ளிட்ட சில நடவடிக்கைகளின் வேலைகளை நிறைவு செய்வதற்காக கடன் தொகை யூரோ 6 மில்லியனாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட 12 பொதிகளில் 5 பொதிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.	
(ii)	இச் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட ஒப்பந்த பெறுமதி ரூபா 1,176 மில்லியன் (வரி அல்லாத) அநுராதபுரம் தெற்கு பல்துறை போக்குவரத்து மையம் அமைக்கும் செயற்திட்டம், 2022 பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 நவம்பர் 25 ஆம் திகதி நிறைவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும், நாட்டில் நிலவிய நிதி நெருக்கடி காரணமாக அமைச்சு இச் செயற்திட்டத்தின் வேலைகளை தற்காலிகமாக நிறுத்தியிருந்தது. எவ்வாறாயினும், கடன் மறுசீரமைப்புத் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு, கடன் வழங்கும் நிறுவனம் பணம் வழங்க இணங்கும் வரையில் செயற்திட்ட வேலைகளை நிறைவு செய்வதற்காக இலங்கை அரசாங்கத்தால் நிதி வழங்க இணங்கியிருந்த போதிலும், கணக்காய்வு செய்யப்பட்ட திகதி வரை அக் கடன் வழங்கும் நிறுவனத்தின் இணக்கம் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும், இதன் நிர்மாணப் பணிகளுக்காக 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை அரசாங்க நிதியிலிருந்து ரூபா 561.46	இந்த யூரோ 6 மில்லியன் பணம் பிரான்ஸ் முகவரமைப்பினால் மீளளிப்பு வடிவில் வழங்கப்படும் என்று 2024 ஆகஸ்ட் 02 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	செயற்திட்ட நிதியை வினைத்திறனுடனும் பயனுள்ள விதத்திலும் பயன்படுத்துவதன் மூலம் திட்ட காலவரையறைக்குள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அதன் பௌதீக முன்னேற்றம் 53 சதவீதமாக இருந்தது.		
(ஈ)	கொழும்பு பெருநகரப் பகுதியை அண்டிய நகர அபிவிருத்திச் செயற்திட்டம் (MCUDP) க்காக கடன் வழங்கிய நிறுவனத்தினால் அமெரிக்க டொலர் 199 மில்லியன் அதாவது இணங்கிய தொகையில் 93 சதவீதமும், இலங்கை அரசாங்கத்தினால் அமெரிக்க டொலர் 53 மில்லியன் அதாவது இணங்கிய தொகையில் 50 சதவீதமும் செலவிடப்பட்டு 2022 டிசம்பர் 31 ஆம் திகதி திட்ட நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. இருப்பினும் இந்தத் திட்டத்திற்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை சட்டரீதியாக ஒப்படைத்து தயாரிக்கப்பட வேண்டிய கலைப்பு கணக்கு 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை .	செயற்திட்டத்தை நிறைவு செய்து கலைப்பு கணக்குகளை தயாரித்து கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக தாமதமின்றி சமர்ப்பித்தல் வேண்டும்.

4.7 உள்ளூர் நிதியுதவியுடன் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
	மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா மில்லியன் 33,237.76 ஆன கொழும்பு பெருநகர திடக் கழிவு முகாமைத்துவத் திட்டத்தை 2017 டிசம்பர் 29 அன்று ஆரம்பித்து 2019 ஜூன் 30 ஆம் திகதிக்குள் முடிப்பதற்கும் 04 பொதிகளின் கீழ் இதனைச் செயற்படுத்தவும் திட்டமிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன:		
(அ)	குறித்த செயற்திட்டத்தின் கீழ், கழிவுப் பரிமாற்ற நிலையம் (A), சுகாதார நிலப் நிரப்பல் (B) மற்றும் புகையிரதப் பாதை நீடிப்பு (C) ஆகிய 03 பொதிகளின் நிர்மாணப் பணிகள் ரூபா மில்லியன் 25,577.95 (அமெரிக்க டொலர் மில்லியன் 100.96) பெறுமதியில் ஒரு சீன நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன்,	குறித்த கேள்விப்பத்திரத்தை இரத்து செய்து மீண்டும் கேள்வி கோருமாறு உலக வங்கி அறிவித்திருந்தது. அதுவரையில் கழிவு முகாமைத்துவத்தில் நாட்டில் நிலவிய கடுமையான பிரச்சினை காரணமாக மீண்டும் கேள்வி கோருவது கடினம் என இந்த	வெளிநாட்டு உதவியில் மேற்கொள்ளப்படவிருந்த உள்நாட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சரியான பெறுகை மற்றும் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாத பொறுப்புள்ள தரப்பினர் மீது முறையான நடவடிக்கை

	அந்நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட முறை வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படாததால், உலக வங்கியின் வழிகாட்டுதலின் கீழ் மீண்டும் கேள்வி கோருமாறு உலக வங்கி வலியுறுத்தியிருந்தும், குறித்த கேள்விப்பத்திரத்தை இரத்து செய்ய முடியாத காரணத்தினால், உலக வங்கியின் உதவியின் கீழ் மேலும் பரந்த துறைகளில் செயற்படுத்த வாய்ப்பு இருந்த இத்திட்டத்தின் செலவினை இலங்கை அரசாங்கம் ஏற்க வேண்டியிருந்தது.	அமைச்சால் உரிய உலக வங்கிப் பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) வழங்கிய விசேட நிதியுதவியின் மூலம் மீதித் தொகையும் திருப்பி அனுப்பப்பட்டது.	எடுக்கப்பட வேண்டியதுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியங்களை வினைத்திறனுடனும், பயனுறுதியுடனும் பயன்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் தேவையான ஏற்பாடுகள் தாமதமின்றி உருவாக்கப்பட வேண்டும்.
(ஆ)	2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா மில்லியன் 21,336.49 செலவிடப்பட்டிருந்த இச் செயற்திட்டத்தின் கீழ், கழிவுப் பரிமாற்ற நிலைய நிர்மாணம், சுகாதார நில நிரப்பல் நிர்மாணம் மற்றும் புகையிரதப் பாதை நீடிப்பு ஆகிய 03 பொதிகளின் பணிகளைப் பெற்ற சீன நிறுவனத்தின் தாமதம் காரணமாக அவ்வப்போது கால நீடிப்புகள் வழங்கப்பட்டிருந்தன. 2024 செப்டெம்பர் 30 ஆம் திகதியுடன் குறித்த வேலைகளை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. ஆயினும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இந்த நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.	களனி கழிவுப் பரிமாற்ற நிலையத்தில் நிறுவப்பட்ட 03 அமுக்கிகள் (Compactors) உரிய முறைகளின் படி இயங்கவில்லை. மேலும், ஒப்பந்த நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய பணம் செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக செயற்திட்டத்தின் பணிகள் மெதுவாக மேற்கொள்ளப்பட்டதுடன், மேலும் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால் ஒப்பந்த நிறுவனத்தால் செயற் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. குறித்த நிலுவைத் தொகையை செலுத்தி முடித்த பின்னர், ஒப்பந்த நிறுவனம் மீண்டும் இப்பணியை முடித்து செயற்திட்டத்தை ஒப்படைக்க 23 வாரங்கள் கோரியுள்ளது. இக் காலப்பகுதியில் குறித்த அமுக்கிகளை அதன் அசல் வடிவில் ஸ்தாபித்து, அதன் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சியும் வழங்கப்பட உள்ளது.	திட்டத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து, செயற்திட்டப் பணிகளைத் துரிதமாக முடித்து, எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளைப் பெற தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான பொதிக்கு (D) ரூபா மில்லியன் 2,963.61 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் 04 புகையிரத இயந்திரத் தொகுதிகள் ரூபா மில்லியன் 8.27 செலவில் 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் இறக்குமதி செய்யப்பட்டு	புகையிரதத் திணைக்களத்திற்கு சொந்தமான 17 புகையிரதப் பெட்டிகளைப் புதுப்பிப்பதற்காக ரூபா மில்லியன் 549.6 செலவில் அமைச்சரவை அனுமதி கோரப்பட்டதுடன் இதற்காக செயற்திட்டத்தின் செயற்பாடுகளை	செயற்திட்டப் பணிகளைத் துரிதமாக முடித்து, எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளைப் பெற தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	புகையிரத திணைக்களத்தின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தன. 94 கொள்கலன்கள் அமெரிக்க டொலர் மில்லியன் 0.8 செலவில் 2022 ஏப்ரல் 22 அன்று இறக்குமதி செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. 34 புகையிரதப் பெட்டிகளை அமெரிக்க டொலர் மில்லியன் 2.3 பெறுமதியில் ஒரு இந்திய நிறுவனத்திடம் இருந்து இறக்குமதி செய்வதற்காக 2019 அக்டோபர் 21 அன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்தாலும், குறித்த நிறுவனம் ஒப்பந்தத்தின்படி கட்டமைப்பு கருத்தியல் திட்டத்தை சமர்ப்பிக்காததால் ஒப்பந்தம் செயலற்றதாக்கப்பட்டிருந்தமையால், மீளாய்வாண்டின் இறுதி வரை புகையிரதப் பெட்டிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. எவ்வாறாயினும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இந்த பொதிக்கு அமைச்சு ரூபா மில்லியன் 2,024.21 செலவிட்டு பெற்றுக்கொண்ட பௌதீக முன்னேற்றம் 95% ஆக இருந்தது.	மேற்கொள்ளும் முதலீட்டாளர் மூலம் இந்தப் புகையிரதப் பெட்டிகளைக் கொள்வனவு செய்ய முடியுமா என ஆராயுமாறு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், புகையிரதப் பெட்டிகள் கொள்வனவு செய்யப்படும் வரை இச் செயற்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான பெட்டிகளை இலங்கை புகையிரதத் திணைக்களம் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.	
(ஈ)	2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை அமைச்சு இத்திட்டத்திற்காக ரூபா மில்லியன் 25,976.27 செலவிட்டிருந்த போதிலும், செயற்திட்டப் பணிகள் நிறைவடையாத காரணத்தினால் செயற்திட்டத்தை செயல்படுத்தி எதிர்பார்த்த பலன்களைப் பெற முடியாதிருந்தது.. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்களும் அவதானிக்கப்பட்டன.		
(i)	கழிவு ஏற்றும் நிலையத்திற்குக் கொண்டுவரப்படும் கழிவுகளை புகையிரத பெட்டி வரை கொண்டு செல்லவும், அருவக்காலு கழிவு நிலையத்திலிருந்து நிலநிரப்பல் வரை கொண்டு செல்லவும் மற்றும் ஏனைய பணிகளுக்காகவும் அமெரிக்க டொலர் மில்லியன் 8.27 பெறுமதியான 44 வாகனங்கள் ஒப்பந்தக்காரரால் கொள்வனவு செய்யப்பட்டு கழிவுப் பரிமாற்ற நிலையங்களின் வாகனத் தரிப்பிடங்களில் நிறுத்தப்பட்டிருந்தன. குறித்த வாகனங்கள் 2019 ஆம் ஆண்டில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தம் முடிந்து ஒப்படைக்கப்படும் வரை	கழிவு சுகாதார நிலப் நிரப்பலில் வைக்கப்பட்ட நாளிலிருந்து அதன் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதால், இந்த வாகனங்கள் தேவைக்கேற்ப தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன.	சொத்துக்களில் இருந்து உச்சப் பயனைப் பெறுவதற்கும், இந்த சொத்துக்களை அமைச்சிடம் சட்டப்பூர்வமாக பொறுப்பேற்று, அமைச்சுச் சொத்துக்களின் கீழ் கணக்கிடவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	சுமார் 05 வருட காலப்பகுதியாக அவை செயலற்றுக் காணப்பட்டன. இதனால், இந்த வாகனங்கள் செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன், உத்தரவாதக் காலமும் கடந்திருந்தமையால், அவற்றை மீண்டும் செயற்பாட்டு நிலைக்கு கொண்டுவருவதற்கு மேலதிக செலவை ஏற்க வேண்டியிருந்தது.		
(ii)	அருவக்காலு சுகாதார நில நிரப்பலின் நிர்மாணப் பணிகள் நிறைவடைவதற்கு முன்னர் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட அவசர தீர்மானம் காரணமாக 2019 ஆகஸ்ட் முதல் 2020 டிசம்பர் வரையான காலப்பகுதியில் ஏறத்தாழ 50,000 மெற்றிக் தொன் நகர்ப்புற திடக் கழிவுகள் வைக்கப்பட்டிருந்தன. இக் கழிவுகளால் உருவான கழிவுநீரைச் சுத்திகரிப்பதற்காக அமெரிக்க டொலர் மில்லியன் 1.13 மேலதிக செலவை ஏற்க வேண்டியிருந்தது.	குறித்த கழிவுநீர் இரண்டு திறந்த குளங்கள் மற்றும் இரண்டு கழிவுநீர் ஒழுங்குபடுத்தும் தாங்கிகளில் சேமிக்கப்பட்டுள்ளது. இக் கழிவுநீரைச் சுத்திகரிப்பதற்காக அமெரிக்க டொலர் மில்லியன் 1.13 இற்கு ஒரு தனி ஒப்பந்தம் வழங்க அமைச்சரவை அனுமதி பெற்றிருந்த போதிலும், திடீரென ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக அருவக்காலு கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமைக்கு கடுமையான சேதம் ஏற்பட்டது. இருப்பினும், இதுவரையில் குறித்த ஒப்பந்த நிறுவனம் அந்த முறைமையை மீண்டும் நிறுவி செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. அதன்படி, 2025 பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் அவர்கள் இந்த சேமிக்கப்பட்ட கழிவுநீரைச் சுத்திகரிப்பதை ஆரம்பித்துள்ளனர்.	செயற்திட்ட நிதி, வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் பயன்படுத்துவதன் மூலம் திட்டக் காலக்கெடுவுக்குள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(iii)	அருவக்காலு கழிவு தேக்கிட பகுதியில் வெளியில் இருந்து சேகரிக்கப்படும் மழைநீரை வெளியேற்றுவதற்காக வடிகால் அமைப்பு கட்டப்படாமையால், 2021 நவம்பர் 09 அன்று ஏற்பட்ட வெள்ளம் காரணமாக அருவக்காலு கழிவு தேக்கிடப் பகுதி வெள்ளத்தில் மூழ்கியமையால், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் கழிவு வாயு சுத்திகரிப்பு நிலையத்தில் நிறுவப்பட்ட இயந்திரங்கள் செயலிழந்திருந்தன.	செயற்திட்டத்தின் வடிவமைப்பில் குறிப்பிடப்பட்டிருந்த புத்தளம் களப்பை நோக்கிய மழைநீர் கால்வாயை அகழ்வதற்கு பிரதேசவாசிகள் எதிர்ப்பு தெரிவித்தமையால் அந்தக் கால்வாயை அகழ்வதற்கு இயலாதிருந்தது. எனவே, ஒப்பந்தக்காரரால் மழைநீர் தேக்கிடத்தின் கொள்ளளவை அதிகரித்ததுடன், செயற்திட்டப் பகுதிக்கு வெளியே இருந்து பாய்ந்து வரும் அனைத்து	செயலிழந்த இயந்திரங்களைச் சீர்செய்வதற்கும், மழைநீரை வெளியேற்றுவதற்கான வடிகால் அமைப்பை நிறுவுவதற்கும் தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	மழைநீரையும் இரண்டு வரம்புகளை அமைத்து களப்பை நோக்கி திசை திருப்பி இருந்தனர். கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவு வாயு சுத்திகரிப்பு நிலையத்தில் நிறுவப்பட்டிருந்த சேதமடைந்த இயந்திரங்கள் தற்போது ஒப்பந்த நிறுவனத்தால் பெரும்பாலும் புதுப்பிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ளவையும் விரைவில் புதுப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	

4.8 சொத்து முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2017 டிசம்பர் 21 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 2(i) பிரிவின் படி, பதிவு உரிமம் இன்றிப் பயன்படுத்தப்படும் வாகனங்களை தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்துகொள்ள வேண்டும் அல்லது பதிவு உரிமத்தின் உரிமையாளரான நிறுவனத்திடம் முறையாக ஒப்படைக்க வேண்டும். எனினும், சட்டபூர்வமான உரிமை அமைச்சிடம் இல்லாத ரூபா மில்லியன் 254.82 பெறுமதியான 21 வாகனங்கள் அமைச்சினால் பயன்படுத்தப்படுவது அவதானிக்கப்பட்டது.	குறித்த வாகனங்களின் உரிமை மாற்றத்தில் பிரச்சினைகள் இருந்தமையால், சட்டபூர்வமான உரிமையை மாற்றியமைப்பதில் தாமதம் ஏற்பட்டது.	சுற்றறிக்கை வழிகாட்டுதல்களின் படி செயற்பட்டு, அமைச்சிற்குத் தேவையான வாகனங்களின் உரிமையை உரிய முறையில் மாற்றியமைப்பதற்கும், ஏனைய வாகனங்களை உரிமையாளர்களிடம் ஒப்படைப்பதற்கும் தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.9 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	ரூபா 107.3 மில்லியன் ஒப்பந்த பெறுமதியான நுவரெலியா நானுஓயா கரையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் 2021 செப்டம்பர் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2022 செப்டம்பர் 28 ஆம் திகதி நிறைவு செய்ய ஒப்பந்தம்	போதியளவு நிதி ஒதுக்கீடு இன்மையால், செயற்திட்டப் பொறியியல் மேற்பார்வை மற்றும் ஆலோசனை அடிப்படையில் அத்தியாவசியமான பகுதிகள் மட்டுமே அடையாளம் காணப்பட்டு இச் செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டது. இச்	அத்தியாவசியமான செயற்திட்டப் பணிகளை வினைத்திறனுடன் நிறைவு செய்யத் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும், அத்துடன் உரிய செயற்திட்டங்களின் வெற்றி மற்றும் அதன் பயன்கள் குறித்துப்

செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 16.34 மில்லியன் வேலை ஆரம்பிக்கும் முற்பணமும் செலுத்தப்பட்டிருந்தது.
எனினும், நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக ஒப்பந்தக்காரரால் குறித்த திகதியில் செயற்திட்டத்தை நிறைவு செய்ய முடியவில்லை, இதனால் 02 சந்தர்ப்பங்களில் கால நீடிப்புகள் அனுமதிக்கப்பட்ட போதிலும் ஒப்பந்தம் செய்யப்பட்ட பணிகளை நிறைவு செய்ய முடியவில்லை. பின்னர், இதன் நோக்கெல்லையைக் குறைத்து நானுஓயாவின் பக்கச் சுவரை மாத்திரமே அமைத்து செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், 2024 டிசம்பர் 31 ஆம் திகதி இச் செயற்திட்டத்திற்காக அமைச்சு ரூபா 47.24 மில்லியன் செலவிட்டிருந்தது. எனினும், நானுஓயாவின் பக்கச் சுவரை அமைக்கும் பணியையும் பூர்த்தி செய்யத் தவறியிருந்தமையால், கரையின் சில இடங்கள் மணல் மற்றும் கழிவுகளால் மூடப்பட்டிருந்தன. மேலும், பராமரிப்புப் பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப் படாமையால் செயற்திட்டம் நிறைவடைந்து ஒரு வருடம் கூட முடிவுறாத நிலையில் நானுஓயாவில் நீர் ஓட்டம் தடைப்பட்டிருந்தமையால் இச் செயற்திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட ரூபா 47.24 மில்லியன் பணம் அநாவசியமான செலவாகியிருந்தது.

(ஆ) ஒப்பந்த பெறுமதி ரூபா 118.89 மில்லியன் ஆன வலப்பனை பலநோக்குக் கட்டிடம் மற்றும் வாரச் சந்தை அமைக்கும் செயற்திட்டம், 2021 செப்டம்பர் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2022 நவம்பர் 11 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த

செயற்திட்டம் 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதி நுவரெலியா நகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதன் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வது அந்த நிறுவனத்தின் பொறுப்பாகும்.

பின்தொடர் நடவடிக்கைகளையும் முறையாக மேற்கொள்ள வேண்டும்.

	போதிலும், அன்றைய தினம் வரை செயற்திட்டத்தின் ஒப்பந்தம் செய்யப்பட்ட பணிகளை நிறைவு செய்ய முடியாதிருந்ததுடன் 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 02/2022 இன் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி இரு தரப்பினரின் இணக்கப்பாட்டின் பேரில் ரூபா 48.94 மில்லியன் வேலை பூர்த்தியாகும் பெறுமதியின் பேரில் செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
(i)	இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்ட 2021/2022 காலப்பகுதி, கோவிட்-19 நோய் தொற்று காரணமாக நாடு அடிக்கடி மூடப்பட்டதால் நிதி நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்த ஒரு காலப்பகுதியாகும். அத்தகைய காலப்பகுதியில் அத்தியாவசிய மற்ற மற்றும் வாரத்திற்கு ஒரு முறை மாத்திரமே நடைபெறும் சந்தை உட்பட, தேவை கண்டறியப்படாத பலநோக்குக் கட்டிடம் அமைக்கும் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ள படி செயற்திட்டம் இடையில் நிறுத்தப்பட்ட நேரிட்டதுடன் இந்தத் திட்டத்தை நிறைவு செய்யாமல் கைவிட்டதன் காரணமாக அதற்காகச் செலவிடப்பட்ட ரூபா 48.94 மில்லியன் பணம் அநாவசியமான செலவாக இருந்தது.	செயற்திட்டத்தின் எஞ்சிய வேலைகளை 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்குத் தேவையான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.	செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியை வினைத்திறனுடனும் பயனுள்ள விதத்திலும் பயன்படுத்தி எஞ்சிய வேலைகளை நிறைவு செய்யத் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	செயற்திட்டப் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்தத் செயற்திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.	முறையான அங்கீகாரத்தைப் பெறுவதில் சில குறைபாடு களுடன் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்ட போதிலும் பின்னர் அந்தக் குறைபாடுகளைச்	இச் செயற்திட்டத்திற்காகப் பெறப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தை கணக்காய்வுக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

		சரிசெய்து செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.	
(இ)	ரூபா 54.62 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட நுவரெலியா வசதி மையம் அமைக்கும் செயற்திட்டம் 2020 செப்டம்பர் 14 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்காக 07 கால நீடிப்புகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 7வது கால நீடிப்பிற்காக 2020 ஜூலை 10 ஆம் திகதி வரை 265 நாட்களை ஒப்பந்தக்காரர் கோரியிருந்த போதிலும், ஆலோசனை நிறுவனம் 256 நாட்களைப் பரிந்துரைத்திருந்தது. மேலும் 2019 டிசம்பர் 15 ஆம் திகதி வரை 48 நாட்களுக்கு மட்டுமே அமைச்சுச் செயலாளரால் அனுமதி வழங்கப்பட்டு எஞ்சிய தாமத காலத்திற்காகத் தாமதக் கட்டணமாக ரூபா 4.32 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. எனினும், தாமதக் கட்டணம் அறவிடுவதற்கு எதிராக ஒப்பந்தக்காரரரல் பிணக்குத் தீர்வு நடுவர் மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் கிடைக்கப்பெற்ற தீர்ப்பின்படி, மேலதிகமாக அறவிடப்பட்ட தாமதக் கட்டணம் மற்றும் அதற்கான வட்டி என ரூபா 5.31 மில்லியன் அமைச்சு 2024 ஜூலை 22 ஆம் திகதி ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தியிருந்தது. பிணக்குத் தீர்வு நடுவர் மன்றத்தின் முன் அமைச்சின் நிரபராதித் தன்மையை நிரூபிக்கக்கூடிய வலுவான சட்ட அதிகாரிகளை நியமிக்கத் தவறியதால், அமைச்சு மேலே குறிப்பிட்ட படி மேலதிக செலவை ஏற்க நேரிட்டது.	பிணக்குத் தீர்வு நடுவர் மன்றத்தால் மேற்கொள்ளப்படும் கேள்விகளுக்கு அது தொடர்பாக விடயங்களைச் சமர்ப்பிக்கக்கூடிய அனுபவமிக்க மற்றும் திறமையான அதிகாரிகள் இன்மையே இதற்குக் காரணம். இதற்கு முன்னரும் இவ்வாறான தகராறு தீர்வுகளில் அமைச்சிற்குக் கிடைத்த தீர்ப்புகளிலிருந்தும் இது தெளிவாகியுள்ளது.	நிர்மாணப் பணிகளுக்குரிய சட்டதிட்டங்களுக்கு இணங்கும் வகையில் தீர்மானங்கள் எடுக்காத பொறுப்பான அதிகாரிகளை அடையாளம் கண்டு இந்த மேலதிக செலவுகளை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும், அத்துடன் அந்தத் துறைகளையும் பலப்படுத்தத் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ)	நானோ + ஆர்ஓ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குடிநீர் வழங்கும் வேலைத் திட்டத்திற்காக 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 219.1 மில்லியன் தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு இறுதி வரை ரூபா 188.1 மில்லியன் செலவில் வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 50 நீர்ச் சுத்திகரிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டிருந்த போதிலும், அவற்றைச் செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வந்து சிறுநீரக நோயாளிகளுக்கு வழங்க அமைச்சு நடவடிக்கை எடுக்காதமையால், அந்தச் சொத்துக்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.	இந்த மாவட்டங்களில் மீளக்குடியேறிய மக்களுக்கு பாதுகாப்பான சுத்தமான குடிநீர் குடிப்பதன் அவசியம் மற்றும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு குறைவாக காணப்படுகின்றது. இந்த 50 செயற்திட்டங்களில் 6 செயற்திட்டங்கள் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதை ஏற்றுக்கொள்வதுடன், இந்தத் செயற்திட்டங்களை மேலும் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்காகத் திட்டமொன்றைத் தயாரிக்குமாறு தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	செயற்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படும் பணத்தை வினைத்திறனுடனும் பயனுள்ள விதத்திலும் பயன்படுத்திச் சுத்திகரிப்பு அமைப்புகளைச் செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வந்து சுத்தமான குடிநீரை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	அமைச்சு இயங்குவதற்காக நிரந்தரக் கட்டிடம் இல்லாத காரணத்தினால், அமைச்சு ஆரம்பிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டு முதல் அலுவலகம் தற்காலிகக் கட்டிடங்களில் நிறுவப்பட்டு, பெரிய மாற்றுத் தொகை மற்றும் வாடகையை செலுத்தி வந்துள்ளது. தற்போதும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இரண்டு கட்டிடங்களில் சில தளங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டு இயங்கி வருகின்றன, அத்துடன் 2024 ஆம் ஆண்டிற்காக அந்த அதிகாரசபைக்கு கட்டிட வாடகையாக ஏறத்தாழ ரூபா 201 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், நகர அபிவிருத்தி அதிகாரசபையும் இந்த அமைச்சின் கீழ் உள்ள ஒரு நிறுவனம் என்பதால், மிகவும் நியாயமான முறைக்கு அதனைத் தயாரிப்பதற்கோ அல்லது அமைச்சிற்குப்	புதிய நிர்மாணங்களுக்கான செலவுக் கட்டுப்பாட்டின் கீழ் அனுமதி வழங்கப்படாதமையால், இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.	அந்தக் கட்டணங்களுக்காக நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சு ஒரு நிரந்தரக் கட்டிடத்தில் நிறுவப்படுவதன் மூலம் அல்லது வேறு நடவடிக்கையொன்றைப் பின்பற்றுவதன் மூலம் அமைச்சு இயங்குவதற்காக மேற்கொள்ளப்படும் செலவுகளைக் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பொருத்தமான நிரந்தரக் கட்டிடத்தில் நிறுவிக் கொள்வதற்கோ எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.10 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதில் அளிக்கப்படாமை

கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2025 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 09 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதில் அளிக்கப்படவில்லை. அத்துடன், 2024 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 20 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதிலளிக்கையில் 19 நாட்கள் முதல் 310 நாட்கள் வரையிலான காலதாமதம் காணப்பட்டது.	அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் பெரும்பாலான செயற்திட்டப் பணிகள் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. அச் செயற்திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பான கணக்காய்வு ஐயவினாக்களுக்கான ஆரம்பத் தகவல்களை அந்த நிறுவனங்களிடமிருந்து பெற்று, ஆய்வு செய்து, பதில்களைத் தயாரிப்பதற்கு சிறிது காலம் எடுக்கும் என்பதை அமைச்சும் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த நிலையைக் குறைப்பதற்கு இது வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	நிதிப் பிரமாணம் 155 மற்றும் 452(1) இன் படி, கணக்காய்வு ஐயவினா பதிவேட்டைப் பரீட்சித்து, பெறப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) பிரிவின் பிரகாரம், குறித்த ஐயவினாக்களுக்கு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பதில் அளிப்பதை பிரதான கணக்கீட்டு அலுவலரால் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு பதில் அளிக்கத் தாமதமாகக் கூடிய ஐயவினாக்கள் இருப்பின், அதற்காக இடைக்கால அறிக்கை ஒன்றை அனுப்பிவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.11 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

	கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	குருநாகல் இராஜபீள்ள நகர்ப்புறப் பூங்கா அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ரூபா மில்லியன் 164.13 பணம் செலுத்தப்பட்டிருந்தது.	இது தொடர்பாக நிதி அமைச்சுடன் கலந்துரையாடியதன் பின்னர் அமைச்சரவை அனுமதி பெறுமாறு 2025 பெப்ரவரி 13 ஆம் திகதிய கடிதத்தின் மூலம்	செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது அதனுடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க வேண்டும்

	செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் முடிவடையும் போது அதன் மொத்த செலவு ரூபா மில்லியன் 169.9 ஆக இருந்தது. இருப்பினும், தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் ரூபா மில்லியன் 24.3 வரையிலான எல்லைக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த எல்லையை மீறிய ரூபா மில்லியன் 145.6 இற்கான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்த நிறுவனத்திற்கு ரூ. மில்லியன் 164.13 பணம் செலுத்துகையில் நிதிப் பிரமாணம் 136 மற்றும் 138 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.	அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, அமைச்சரவை அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் படி நிதிப் பிரமாணம் 136 மற்றும் 138 இற்கு இணங்க நடவடிககை எடுக்கப்படவில்லை எனக் குறிப்பிடுவது உண்மைக்குப் புறம்பானதாகும்.	என்பதுடன், அமைச்சரவை அனுமதியைப் பெற்று கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீள்குடியேற்றப் பிரிவில் பணியாற்றும் 39 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 06 மாவட்டச் செயலகங்கள் மற்றும் 17 பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களது செயல்திறன் மதிப்பீடு செய்யப்படாமையால், குறித்த உத்தியோகத்தர்களை அச் செயலகங்களுக்கு இணைத்ததன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்பட்டதாகக் கணக்காய்வில் கண்டறியப்படவில்லை. குறித்த உத்தியோகத்தர்கள் உரிய சேவை நிலையங்களுக்கு அறிக்கை செய்தமை தொடர்பான தகவல்கள் மீள்குடியேற்றப் பிரிவில் பேணப்பட்டிராததுடன், குறித்த உத்தியோகத்தர்களின் விடுமுறைகள் தொடர்பான விபரங்களும் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.	வடகிழக்கு மாவட்டச் செயலகங்களில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்துச் சம்பளப் பட்டியல்களிலும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களால் கையொப்பமிடப்பட்டுள்ளதுடன், குறித்த தகவல்கள் 2024 மே 27 அன்று கணக்காய்வுக்கு வழங்கப்பட்டுள்ளன.	மாவட்டச் செயலகங்களுக்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் செயல்திறன் மதிப்பீடு தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், வருகை மற்றும் விடுமுறை விபரங்கள் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் படி பேணப்பட்டு, அதற்கு இணங்க சம்பளம் தயாரித்தல் மற்றும் செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	அதன்படி, குறித்த உத்தியோகத்தர்களின் சேவைக்கு வருகை தந்தமை உறுதிப்படுத்தப்படாத நிலையில் அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.		
(இ)	நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் செயற்பட்ட திட்டங்களுக்கு எதிராக தற்போது நீதிமன்றங்களில் 07 வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவற்றில் 05 வழக்குகள் தொடர்பாக எதிர்காலத்தில் ரூபா மில்லியன் 6,137 செலுத்த நேரிடலாம் என 2024 ஆம் ஆண்டின் கணக்கு அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சிற்குப் பாதகமான தீர்ப்புகள் வழங்கப்படின் அது எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு மேலதிக செலவுச் சுமையாக அமையும் என்பது அவதானிக்கப்பட்டது.	வழக்கு நடவடிக்கைகளின் முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	வழக்குகள் குறைவாக இருக்கும் வகையில் நிர்வாக நடவடிக்கைகள் வழிநடத்தப்பட வேண்டும் என்பதுடன், தற்போது நிலுவையில் உள்ள வழக்குகளில் அமைச்சிற்கு சாதகமான தீர்ப்பைப் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

5. நல்லாட்சி

5.1 மக்களுக்கு சேவைகள் வழங்குதல்

கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
தலவாக்கலை நகரத்தின் நிலத்தோற்ற அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சு ரூபா மில்லியன் 16.15 (வரி நீங்கலாக) செலவிட்டிருந்தது. எனினும், அந்தப் பகுதியும் நடைபாதையும் எந்தவொரு பராமரிப்புப் பணிகளும் செய்யப்படாதமையால், பற்றைக்காடு வளர்ந்து காணப்பட்டதுடன், உடற்பயிற்சிக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது.	இச் செயற்திட்டம் 2021 ஆம் ஆண்டில் சியக நகர நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தலவாக்கலை-லிந்துலை நகர சபையின் கோரிக்கையின் பேரில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டு, பணிகள் முழுமையாக முடிவடைந்து 2022 பெப்ரவரி 21 அன்று லிந்துலை நகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன்படி, நிர்மாண வளாகத்தின் பராமரிப்புப் பணிகளை லிந்துலை நகர சபை மேற்கொள்ள வேண்டும் என்பதை அறியத்தருகிறேன்.	சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நன்மைகள் பொதுமக்களுக்குக் கிடைக்கப்பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும், அந்தப் பகுதியில் 90 மரங்களை நடுவதற்கு ரூபா மில்லியன் 0.25 செலவிடப் பட்டிருந்த போதிலும், அத்தகைய மரங்கள் நடப்பட வில்லை. அதன்படி, இந்த அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட தலவாக்கலை நகரத்திற்கு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பிரதான நோக்கம் நிறைவேற்றப் பட்டிராததுடன் இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் பொதுமக்களுக்கும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.